தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 20 ரூபா • தீபம் 23 • 27.12.2015



அனைவருக்கும் புதுவருட வாழ்த்துக்கள்

Mahaa's Digital




T.P : 077 9906581 | 024 - 4545035





# வெள்ளையாக இருப்பவன் பொய் சொல்ல மாட்டானா?

தமிழ்மக்கள் பேரவை நல்லதா? கெட்டதா?. தமிழ் மக்கள் பேரவை பிளவிற்கு வழிவகுக்குமா? இல்லையா?. இப்படி ஏராளம் கேள்விகளுடன் மக்கள் குழம்பிப் போயிருக்கிறார்கள். தமிழ்மக்கள் பேரவையின் உருவாக்கம், செயற்றிறன், எதிர்காலம் பற்றி தீபத்தின் எக்ஸ்ரே ரிப்போர்ட் இது.


தொடர்ச்சி 4-ம் பக்கம்





'வடமாகாணசபை உறுப்பினர் ஆயுப் அஸ்மின் எங்களை மோசம் செய்துவிட்டார். நீண்ட காலமாக ஏமாற்றி வருகிறார்' இப்படியொரு பரபரப்பை கிளப்பியுள்ளனர் இரண்டு பெண்கள். வடமாகாணசபையின் கட்டிட தொகுதிக்குள் நுழைந்து அவர்கள் வைத்த கண்ணீர் கோரிக்கைதான் இன்றைய திகதியில் பட்ஜெட்டை விடவும் மாகாணசபைக்குள் சூடான விவாதப்பொருள்.

தொடர்ச்சி 8-ம் பக்கம்

# அஸ்மின் எங்களை ஏமாற்றினார் பெண்களின் 'பகீர்' புகார்




'அடிச்சாலும் பிடிச்சாலும் அண்ணன்தம்பி' ரெலோ 6


மாட்டுவண்டில் சவாரி 10





வடக்கின் வலசைப்பறவைகள் புதிய தொடர் 20


உள்ளே...




# மக்களின் தீபம்

இது தீபத்தின் 23வது இதழ். இந்த வருடத்தின் இறுதி இதழ். கடந்த யூலை மாதம் தீபத்தின் முதலாவது இதழ் வெளியானது. வருடநிறைவில் திரும்பிப்பார்க்க 23 வது இதழில் நிற்கிறோம்.

தீபத்தின் முதலாவது இதழில், தமிழ்ச்சூழலில் அச்சுத்துறை எதிர்கொள்ளும் நெருக்கடிகள், வாசகப்பரப்பை மெதுமெதுவாக இழந்துவரும் அச்சு ஊடகத்துறை, பெரும் வாசகப்பரப்பை கொண்ட ஊடகங்கள் உருவாக முடியாமை பற்றியெல்லாம் பேசியிருந்தோம். இலங்கையில் வெளியாகும் எல்லா தமிழ் பத்திரிகைகளும் இந்தவகையான நெருக்கடிகளை சந்திக்கின்றன. பத்திரிகை அச்சிடலென்பது நெருப்பில் நீந்துவதற்கு ஒப்பானதென்ற உண்மையை அறிந்துதான் தீபம் வெளியாக தொடங்கியது.

அவ்வளவு நெருக்கடிகளிற்குள்ளும் தீபம் துணிந்து களமிறங்க காரணமிருந்தது. வெகுஜன கவர்ச்சிமிக்க அச்சு ஊடகத்துறை தமிழர்களிடம் இல்லை, தரம்மிக்கவற்றை வாசகர்கள் வரவேற்பார்கள் என்பதை உணர்ந்திருந்தோம். அதுதான் நடந்திருக்கிறது.

சம்பிரதாயமான தமிழ் பத்திரிகைத்துறைக்கும் அப்பால் கவர்ச்சிமிக்க வாசனை உலகம் உள்ளதென்பதையும், அரசியல் நோக்கங்களுடன் கட்சிசார்பு செய்திகளிற்கு அப்பாலான யதார்த்தங்களும் தீபத்துடன் கைகோர்த்து வாசகர்கள் அறிந்து கொண்டுள்ளனர். இதன்வெளிப்பாடுதான் நான்கரை மாதங்களிற்கும் குறைந்த காலப்பகுதியில் வடக்கில் 'அதிக விற்பனை வீத'த்தை கொண்ட பத்திரிகையென்ற ஸ்தானத்தை தீபத்தால் பெற முடிந்துள்ளது.

வாசகர்களின் முழுமையான ஆதரவினாலேயே இது சாத்திப் பட்டது. தீபத்தின் முதலாவது இதழில், 'தரமானவற்றை மக்கள் ஆதரிப்பார்கள்' என்ற நம்பிக்கையை வெளியிட்டிருந்தோம். மக்களின் எதிர்பார்ப்பை ஒவ்வொரு இதழிலும் பூர்த்தி செய்தோம். இதுதான் நமது பிணைப்பை வலுப்படுத்தியது.

இப்படியான மகிழ்ச்சிகரமான ஒரு பக்கம் இருந்தால், குரோதம் நிறைந்த இன்னொரு அத்தியாயமும் இந்த காலப்பகுதியில் உருவாகியுள்ளதென்பதே வருத்தம் தரும் உண்மை. அந்திமகாலத் திலிருக்கும் தமிழ் அச்சு ஊடகத்துறையின் போதாமைகளை களைந்து, அதிக வாசகர்களை ஈர்த்து, ஊடகத்துறைக்கு ஒட்சிசன் கொடுக்கும் தீபத்தின் முயற்சியை அனைத்து தரப்பினரும் வரவேற்றிருக்க வேண்டும். மாறாக, சில பத்திரிகை மற்றும் சம்பிரதாய பத்திரிகையாளர்கள் குரோதத்தை தூண்டும் விசமப்பிரச் சாரங்களை தீபத்திற்கு எதிராக கட்டவிழ்த்து விட்டுள்ளனர். தீபத்தை அவதூறு செய்து யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் பத்திரிகையொன்றில் அவதூறு கட்டுரையே வெளியாகியிருந்தது. அதே பத்திரிகையில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த தனியார் கல்விநிலைய ஆங்கில ஆசிரியர் ஒருவரும் 'மொட்டைக்கடித' பாணி அவதூறு எழுதியிருந்தார்.

இந்த அவதூறு பிரச்சாரம் கடந்த தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட சிறிய அரசியல்அணியொன்றினால் முன்னெடுக்கப்படுகிறது. தீபம் வாரஇதழ் தமிழ்தேசிய கூட்டமைப்பை ஆதரிப்பதாக அவர்கள் தீவிர பிரசாரம் செய்கிறார்கள். தமிழர்களின் அரசியல்தேவையின் நிமித்தம், தீபம் தமிழ்தேசிய கூட்டமைப்பை ஆதரிக்க வேண்டுமென நினைத்தால், ஒளிந்திருந்து கல்லெறிபவர்களிற்கு அஞ்சி அதனை மறைக்காது. அதனை பகிரங்கமாகவும், முழுவீச்சிலும் செய்யும். அதற்கான துணிவும், வல்லமையும் தீபத்திடம் உள்ளது.

எனினும், தீபம் எந்த அரசியல்கட்சியினதும் பத்திரிகை அல்ல. அது முழுக்க முழுக்க மக்கள் பத்திரிகை. அதனால் எந்தக் காலத்திலும் அது அரசியல்கட்சிகளின் பிரசார மேடையாக இருக்காது. உண்மையின் உரைகல்லாக மாத்திரமே இருக்கும். தீபத்தின் கடந்த 22 இதழ்களையும் படிக்கும் ஒருவர் தீபத்தின், மக்களரசியலை புரிந்திருப்பார்கள்.

தமிழ் அரசியல்சூழலில் உள்ள எல்லா அரசியல்கட்சிகளையும் தீபம் கறாராக விமர்சனம் செய்துள்ளது. எல்லா போதாமைகளையும் தீபம் அம்பலப்படுத்தியுள்ளது. தமிழ் பத்திரிகைகளில் இவ்வளவு குறுகியநாளில் இவ்வளவு காத்திரமான பணி செய்த பிறிதொன்று இல்லையென்பதால்த்தான் மக்கள் தீபத்தை வரவேற்கிறார்கள்.

உங்களின் நம்பிக்கையை இறுதிவரை பேணிப்பாதுகாப்பது நமது கடமை. எல்லா உண்மைகளின் காட்சிக்கூடமாக தீபம் தொடர்ந்தும் இருக்கும்.

தீபத்திற்கு மக்களே வாசகர்கள். மக்களே தலைவர்கள்.

**தீபம்**
211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
☎ 0212216633 ✉ deepamdesk@gmail.com



## Gnanadas Kasinathar

உலகில் எக்காலத்திலும், எந்த இடத்திலும் எந்த இரு மனிதர்களுக்கிடையிலும் 100 வீத கருத்தொற்றுமை இருப்பதில்லை.

காவியக் காதலர்கள், சொர்க்கத்தில் நிட்சயிக்கப்பட்ட கணவன் மனைவி, இரத்தமும் சதையுமாக் உள்ள தாய் பிள்ளை, உயிர் கொடுக்கும் நண்பர்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள், புலிகள், புலி எதிர்ப்பாளர்கள், தமிழ்த் தேசிய வெறியர்கள், தமிழ்த் தேசியவாதிகள், மாக்சிஸ்ட்டுகள், மாவோஸ்ட்டுகள், ட்ராஸ்கிஸ்ட்டுகள்... எந்த வகையைச் சேர்ந்தவர்களாயினும், எந்தக் குழுவைச் சேர்ந்தவகளாயினும், எந்தக் கோட்பாடுகளைக் கடைப்பிடிப்பவர்களாயினும், எந்த வெறியர்களாயினும், இஸ்ட்டுக ளாயினும், வாதிகளாயினும்....

இரண்டு மனிதர்களுக்கிடையில் 100 வீதம் கருத்தொற்றுமை இருக்காது. இரண்டு தமிழ்த் தேசிய வாதிகள் பீப் பாடல் விடயத்தில் வெவ்வேறு கருத்தைக் கொண்டிருப்பர். இரண்டு புலிகள் பிரன்சில் நடந்த குண்டுவெடிப்புச் சார்ந்து வெவ்வேறு கருத்தைக் கொண்டிருப்பர், ஒரே கட்சியைச் சேர்ந்த இரண்டு இடதுசாரிகள் ஈழம்சினிமா சார்ந்து இருவேறு கருத்தைக் கொண்டிருப்பர்.

மனிதர்களின் இயற்கையான இந்தப் பண்பே, உலகெங்கும் உள்ள ஆட்சியாளர்கள், அதிகார வர்க்கத்தினர், சுரண்டும் வர்க்கத்தினர், அரசியல்வாதிகளினது பலமாகும். இதை நம்பியே அவர்களின் பிழைப்புப் போகின்றது. உலகில் எங்கும் எப்பவும் எந்த மக்களும் ஒரே குடையின் கீழ் வர மாட்டார்கள் என்ற நம்பிக்கை.

கார்ல் மார்கசும் எங்கெல்சும் "உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்!" என்றார்கள். 60கள், 70களில் உலகெங்மெங்கும் ஒரு பெரும் இடதுசாரித்துவ அலை வீசியது. உலகத் தொழிலாளர்கள் எல்லாரும் மார்க்சிசம் என்னும் சிந்தனையின் அடிப்படையில் ஒரு குடையின் கீழ் அணிதிரள்வதற்கான சமிக்ஞைகள் தென்பட்டன.

மேற்குலக முதலாளித்துவ நாடுகள் மிரண்டு போயிருந்த காலம் அது. அந்தக் காலப் பகுதியில் தோன்றியவைதான், பின், முன், நியோ, லியோ எனப் பற்பல புதிய அதி நவீன கோட்பாடுகள். மார்க்சியத்தின் சாபக்கேடு என்னவென்றால், மார்க்சியவாதிகள் பலருக்கு "அறிவுமேனியா" உண்டு. ஏனெனில் பெரும்பாலான மார்க்சியவாதிகள் தொழிலாள வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர். அவர்கள் மத்தியதர, மற்றும் உயர் மத்தியதர வர்க்க அறிவாளிகள். விடுதலை, சோசலிசம் என்பவற்றை விடவும் அவர்களுக்கு தத்துவங்கள் மீதுதான் அதிக காதல் இருந்தது. இப்பவும் பெரும்பாலும் அப்பிடித்தான். அவர்கள் ஒவ்வொருவரும் புதிதாக முளைத்த தத்துவங்களால் கவரப்பட்டு ஒருவர் மற்றொருவருடன் மோதிக் கொண்டனர். அந்த மேதல்கள் இன்னும் தொடர்கின்றன. நாளுக்கு நாள் கோட்பாடுகளும் தத்துவங்களும் புதிது புதிதாக வந்தவண்ணம் உள்ளன. தேவை கருதியும் அவை வருகின்றன. மக்களை எவ்வளவு பிரித்து வைக்க முடியுமோ அவ்வளவு பிரித்து வைப்பதற்கான தந்திரமாக ஆட்சியாளர்கள், அதிகார வர்க்கத்தினரால் உருவாக்கப்படும் தத்துவங்களும் உள்ளன. எது எப்பிடி இருந்தாலும் மக்கள் மேலும் மேலும் பிளவுபடுவதும் அதிகார வர்க்கங்கள் அதன் பயன்களைப் பெறுவதும் தவறாது நடந்து கொண்டிருக்கின்றது.

மக்களை இவ்வாறு குழுக் குழுவாக பிரித்தும் திருப்தி காணாத அதிகார வர்க்கங்கங்கள் மக்களை தனித் தனி ஆட்களாக பிரித்து வைத்திருப்பதற்கான சாத்தியமான வழிகளை எல்லாம் முயற்சி செய்து கொண்டே இருந்தார்கள். அதற்கு ஏதுவாக அமைந்ததுதான் இந்த சமூக வலைத்தளங்கள். சமூக வலைத்தளங்கள் மக்களை தனித்தனியாளாகப் பிரிந்து நிற்பதற்கான பொறிமுறை உத்தியை செம்மையாகக் கொண்டுள்ளன.

எந்தக் குழுவைச் சேர்ந்வராக இருந்தாலும், ஏதோ ஒரு புள்ளியில் அவர்கள் வெவ்வேறு கருத்தைக் கொண்டிருப்பர். ஒரு புறம் நாளாந்தம் ஏதோ ஒரு புதுப் பிரச்சினை உலகின் ஏதோ ஒரு மூலையில் நிகழ்கின்றது அல்லது அவ்வாறு உருவாக்கப்படுகின்றது. மறுபுறம் அந்தப் பிரச்சினை சார்ந்து ஒவ்வொருவரும் தத்தம் கருத்துத் தெரிவிப்பதற்கான தளமாக சமூக வலைத்தளங்கள் உள்ளன. ஒவ்வொரு தனிநபரின் கருத்துச் சார்;ந்தும் விவாதங்கள் வருகின்றன. விவாதங்கள் பிரிவுகளை ஏற்படுத்துகின்றன. பிரிவு ஒரு பிரச்சினையில் இல்லாவிட்டால் இன்னொரு பிரச்சினையில் வரும். ஏனெனில் இரண்டு மனிதர்கள் எப்பபோதும் எல்லா இடத்திலும் ஒரே கருத்தைக் கொண்டிருக்கப் போவதில்லை. விவாதம் செய்வதற்கான பிரச்சினைகளுக்கும் குறைவிருக்கப் போவதில்லை. விவாதம் செய்வதும் பிளவு படுவதும், தனித்தனி நின்று ஒருவர் மற்றவருடன் சண்டை செய்வதுமே எதிர்கால பிரதான மகிழ்வூட்டலாக ஆகிக் கொண்டிருக்கின்றது.

இன்று ஒத்த நோக்குடையோர், ஒரே கோட்பாட்டை பின்பற்று பவர்கள் பலர் கண் முன்னால் பிளவுபட்டு, பிளவுபட்டு, பிளவுபட்டு தனி தனி ஆட்களாகச் சென்று கொண்டிருப்பதை கண்கூடாகப் பார்க்க முடிகின்றது. இலங்கையில், மகிந்த மொக்குத்தனமாக முகநூலை தடை செய்ய யோசித்தார். நல்லாட்சிக்காரர் சாணக்கியத்தனமாக அதனைப் பயன்படுத்துகின்றனர். நல்லாட்சியின் கைக்கூலிகள் முகநூலில் புகுந்து விவீளாயடுகிறார்கள். புது புதுப் பிரச்சினைகளை உருவாக்கி திசையற்ற, நோக்கற்ற விவாதங்களையும் சண்டைகளையும் கூட மூட்டி விடுகிறார்கள். தமிழ்த் தேசியவாதிகள் தனித் தனி ஆளாகிக் கொண்டு போகின்றனர். இடதுசாரிகள் போகுமிடம் தெரியாது போய்க் கொண்டிருக்கின்றனர்.

இன்று ஈழத்தமிழர்களாகிய எமக்கு முதன்மையாகவும் முதலாவதாகவும வேண்டியது; ஒருமைப்பாடு. அந்த ஒருமைப்பாட்டுக்கு சவாலான விடயமாக சமூக வலைத்தளங்கள் அமைந்துவிட்டன. அதற்காக சமூக வலைத்தளங்களில் இருந்து ஒதுங்கி இருந்துவிட முடியாது. மாறாக அதனை எவ்வாறு கையாள்வது என்பதில் ஒரு ஒழுங்கை அல்லது சாணக்கியத்தைக் கொண்டிருக்க வேண்டியுள்ளது.

எனக்குத் தெரிந்த ஒரு வழி: ஒருவர் போடும் ஸ்டேடசில் உங்களுக்கு உடன்பாடு இல்லை என்றால், அதற்குப் பின்னூட்டம் எழுதுவதைத் தவிர்த்து நீங்களாக உங்கள் கருத்தை உங்கள் ஸ்டேசாகப் போடுவது. ஏனெனில் ஒவ்வொருக்கும் சுயமாக சிந்திக் கவும் கருத்துச் சொல்லவும் உரிமை உண்டு. அப்படிப் ஸ்டேடஸ் போடும் போது நபர்களை நேரடியாகவோ மறைமுகமாகவோ குறிப்பிடாதிருப்பது நல்லது. தற்செயலாக ஒருவர் கோபம் ஊட்டும் பின்னூட்டத்தைப் போட்டால் அதற்குப் பதில் அளிக்காது இருப்பது. அதற்கு வெறுமனே லைக் மட்டும் போடுவது அல்லது கண்டு கொள்ளாமல் இருப்பது.

நாம் இந்த விடயத்தில் ஏனோதானோ போக்கைக் கடைப்பிடிப் போமாயின் நாம் எதற்காக முகநூலைப் பயன்படுத்துகிறோமோ அதற்கு எதிரான விளைவுகளையே பெற நேரிடும்.

Like Comment Share

# க்ளிக் பக்கம்

திருகோணமலை கடற்கரையில் எடுத்தது. கடலோடு வாழும் மீன்பிடி தொழிலாளர்களின் வாழ்வின் காட்சி. மீனைப்போல நீரில் வாழும் அவர்களின் வாழ்க்கை பிரமிப்பூட்டியது.

**என்னைப்பற்றி:** நான் கந்தசாமி ஜெயவிக்னேஸ்வரி. தொழில்முறை புகைப்படகலைஞர் அல்ல. சும்மா இடையிடையே கமராவை தூக்குவேன்.



படப்பிடிப்பாளர்: ஜெயவிக்னேஸ்வரி
இடம்: திருகோணமலை கடற்கரை



குறிப்பு: உங்கள் படங்களையும் அனுப்பி வையுங்கள் deepamdesk@gmail.com




கடந்தவாரம் தீபத்தின் சமூக ஊடகங்களில் அதிகம் பகிரப்பட்டு, அதிகம் பேசப்பட்டது இந்தப்படம். யாழ் நகரத்திற்கு அருகில் ஏ9 வீதியில் எடுத்தது. வயதான தம்பதியின் அன்னியோன்யம் வெளிப்பட்ட காட்சி. கொளுத்தும் வெய்யிலிலும் கருகாத அன்பின் தளிர்.

**Dayana Day**
ரொம்ப ரொம்ப பிடித்து இருக்கு

**Gayathree Srikandavel**
Gayathree Srikandavel
Salute to this couple

**Sri Kamala**
Sri Kamala God bless

**Gowri Shanthi**
Ellamai arlagu-allàm-conja-karlahtil-maraium-ķanavan-manavejin -unmaija-arlagu-muthmaijelum-thodanthu varum-anpu-arthu-eraivan-arse

facebook



**facebook.com/mayurapriyan**
சம்பந்தனால் தான் தமிழ் மக்கள் பேரவை உருவானது. எனவே இந்த அமைப்பு கூட்டமைப்புக்கு குடைச்சல் கொடுக்காது.

facebook



**facebook.com/rimazahamed**
"கட்டிலிடும் சூட்டோடு தொட்டில் கட்டு அன்னமே;
முல்லைக்கொடி தரும் அந்த பிள்ளைக்கனி வேண்டுமே"
இந்த பேராசைக்குத்தான் மீனா வயித்துல புழு பூச்சி உண்டாகல மிஸ்டர் எஜமான்.
நீதி: பேராசை பெருநட்டம்



**facebook.com/vannanserr.vannan**
வெளிநாட்டுக்கு வந்து வெள்ளைக்காரனை வாழ வைக்கிறதைப் பாக்க ஊரில இருந்து கொஞ்ச வாழை வச்சு பிழைப்பை பாத்திருந்தால் கூட இப்ப ஆகா ஓகோன்னு இருந்திருக்கலாம். ஆசை யாரைத்தான் சும்மா விட்டது!!




**facebook.com/neethujan**
மைக் எடுத்தவனுக்கு வாயால சாவு,
பைக் எடுத்தவனுக்கு நாயால சாவு.

facebook



**facebook.com/rushangank**
க.பொ.த. சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றுபவர்களில் சுமார் 40 சதவீதமானவர்கள் உயர்தரத்துக்குத் தேறுவதில்லை. உயர்தரப் பரீட்சையில் தோற்றுபவர்களில் சுமார் 8 சதவீதமானவர்கள் மாத்திரம் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாக, மீதி 90 சதவீதத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு அந்த வாய்ப்புக் கிடைப்பதில்லை. ஆக, சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் எண்ணிக்கை விகிதாசாரப்படி பார்த்தால், அவர்களில் சுமார் 34 சதவீதமானவர்களுக்கே பல்கலைக்கழக வாய்ப்புக் கிடைக்கிறது. சுமார் 95 சதவீதமானவர்களுக்கு மேற்பட்டவர்கள் இந்தக் கல்வி முறையால் வெளியே தூக்கி வீசப்படுகின்றனர். பரீட்சையில் தோற்றவர்கள் என்ற அடையாளத்துடன், பாடசாலைகளும், வீடும், சமூகமும் இவர்களை ஒதுக்கியே வைக்கிறது. பரீட்சைகளில் எதிர்பார்த்த பெறுபேறுகளைப் பெறவில்லை என்ற ஒரே காரணத்துக்காக இவர்களை தோற்றுப்போனவர்கள் என்று ஒதுக்கி வைப்பது எந்த வகையில் நியாயமானது?



மகிந்த ராஜபக்ச யோகாசனம் செய்யும் காட்சி. அவரது மகன் நாமல் தனது சமூகவலைத்தளத்தில் வெளியிட்ட காட்சி

## நம்மூர் நாயகர்கள்

யாழ் திருநெல்வேலி இளைஞர்கள் சிலர் இணைந்து அகழ் பவுன்டேசன் என்ற அமைப்பை உருவாக்கியுள்ளனர். நண்பர்களின் உதவியுடன் சேர்க்கப்படும் நிதியின் மூலம் பல்வேறு முன்னுதாரண காரியங்கை செய்து வருகிறார்கள். அண்மையில் மாவிட்டபுரம் வடக்குஅமெரிக்கமிசன் பாடசாலையில் கல்விபயிலும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களையும் வழங்கியுள்ளனர்.



## எண்ணிக்கை

**2,700** கோடி
இந்தாண்டில் கொழும்புதுறைமுக வருமானம்

**2,448** ஏக்கர்
அந்த மாரியில் துணுக்காயில் விவசாய செய்கை அழிவு

**30%**
குடாநாட்டு மழைவீழ்ச்சியில் கடலை சென்றடையும் வீதம்





### 1-ம் பக்க தொடர்ச்சி

அமெரிக்கா, இந்தியா, ஐரோப்பிய நாடுகள் போன்ற வல்லமைமிக்க அரசியல்சக்திகளின் முயற்சியும் தோல்வியடைந்து விட்டதா?

இப்படித்தான் அரசியலரங்கில் இப்பொழுது குசுகுசுக்கிறார்கள். புதிய அரசியல் கூட்டொன்று உருவாகுவதை தடுப்பதற்கு மேற்சொன்ன உலகத்தின், பிராந்தியத்தின் பொலிஸ்காரர்கள் கடுமையான முயற்சிகள் செய்தபோதும், கடந்த 19ம் திகதி யாழ்ப்பாண பொதுநூலகத்தில் சத்தமில்லாமல் உருவாகியுள்ளது 'தமிழ் மக்கள் பேரவை'.


தமிழ்தேசிய கூட்டமைப்பிற்குள் கடந்த சிலமாதங்களாகவே பகிரங்கமாக வெளித் தெரிந்த 'லடாய்' இப்படியான வில்லங்கமான காரியத்தில்த்தான் போய் முடியுமென்பதை ஊகிக்க முடிந்ததான். ஆனால் அது எப்போது நடக்கும்? எப்படி நடக்குமென்பதையாராலும் ஊகிக்க முடியாமலிருந்தது. அதை தடுக்கவும், விரைவுபடுத்தவும் பலதரப்பும் காய்நகர்த்தி கடந்த சில மாதங்களாகவே அரசியலரங்கை கொதிப்பில் வைத்திருந்தார்கள். இறுதியில் இப்படியொரு அமைப்பு உருவாகியுள்ளது.

வடக்கு முதல்வர் விக்னேஸ்வரனின் தலைமையில் உருவாகியுள்ள இந்த அமைப்புக்கு இரண்டு இணைத்தலைவர்கள் உள்ளனர் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் இருதய சத்திரசிகிச்சை நிபுணர் லக்ஸ்மன், மட்டக்களப்பு சிவில் சமூக பிரமுகர் ஆகிய இருவரும் இணைத்தலைவர்கள்.

இந்த அமைப்பு ஒரு அரசியல் கூட்டணியல்ல, மக்கள் அமைப்பு என்பதை ஏற்பாட்டாளர்கள் திரும்பத்திரும்ப வலியுறுத்துகிறார்கள். தமிழ் மக்கள் பேரவையென்ற அந்த அமைப்பு உருவானதை தொடர்ந்து, இணையத்தளங்களிலும், சமூகஊடகங்களிலும் பல அவசரக்குடுக்கைகள் 'புதிய கூட்டணி மலர்ந்தது' என எழுதினார்கள். ஆனால், அவர்கள்


### எதிர்மறை கேள்விகள்

**தீபம்:** அண்மைக்காலமாக நீங்கள் தமிழரசுக்கட்சியை கடுமையாக விமர்சித்து வருகிறீர்கள். தமிழரசுக்கட்சியை பழிதீர்க்க இந்த கூட்டு உருவானதென நம்பலாமா?



**சுரேஷ் பிரேமச்சந்திரன்:** தமிழ் தேசிய கூட்டமைப்பை பதிவு செய்ய வேண்டுமென 2002 இலிருந்து வலியுறுத்தி வருகிறேன். அது சிலருக்கு ஒவ்வாமையாக உள்ளது. அதனால் என்னைப்பற்றி விசமப்பிரச்சாரம் செய்கிறார்கள். நான் இப்பொழுதும் தமிழ்தேசியக்கூட்டமைப்பில்த்தான் இருக்கிறேன். பழிதீர்க்கும் எண்ணமெதுவும் இல்லை. இப்பொழுது சிவில் சமூகம், மதபோதகர்கள், அரசியல்கட்சிகள் இணைந்து தமிழ்மக்களின் பிரச்சனைக்கு தீர்வு வேண்டுமென்பதற்காக இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. அதனால் அந்த அமைப்பில் இணைந்து பணியாற்றுவதில் எந்த பிரச்சனையுமில்லை.

**தீபம்:** தமிழ் மக்கள் பேரவையில் முஸ்லீம்கள் இணைக்கப்படவில்லை. முஸ்லீம்களிற்கெதிரான மனநிலையென கொள்ளலாமா?



**நல்லை ஆதீன குரு முதல்வர்:** நிச்சயமாக இல்லை. வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக இருக்கின்றனர். அவர்களிற்கு நிறைய பிரச்சனைகள் உள்ளன. அவற்றை தீர்க்கவே இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. முஸ்லீம்கள் தனியான பிரதேசங்கள் கோரிவருவதால் முதலில் தமிழ்மக்களின் பிரச்சனைகளிற்கு தீர்வை ஏற்படுத்தி, அதனடிப்படையில் முஸ்லீம்களுடன் இணைந்து செயற்படுமென நினைக்கிறேன்.

சொன்னதைப் போன்ற அரசியல் கூட்டணியல்ல இது. ஆனால் அரசியல் கூட்டணியாக மலரும் வாய்ப்புக்கள் இல்லையென்று சொல்வதற்குமில்லை.

இது எங்கு போய் முடியும்? அரசியல் கூட்டணியாக பரிணமிக்குமா என்பதுதான் இப்பொழுதுள்ள மில்லியன் டொலர் பெறுமதியான கேள்வி.

**'உண்மையான' தமிழ்தேசிய கூட்டமைப்பு**

கடந்த பொததேர்தல் சமயத்தில் வடக்கு முதல்வர் தமிழரசுக்கட்சி மோதல் வெளிச்சத்திற்கு வந்தது. இரண்டுதரப்பும் போட்டிபோட்டுக் கொண்டு விலகிச் சென்றார்கள். கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுத்தலைவர் சம்பந்தனும், வடக்கு முதல்வர் விக்னேஸ்வரனும் நேரில் பேசி பல மாதங்களாகிவிட்டதென்றால் பார்த்து கொள்ளுங்கள் மோதலின் உக்கிரத்தை. நேரில் பேசிக்கொள்ளப் போகிறோமென இரண்டு தரப்பும் பகிரங்கமாக கூறியிருக்கிறார்களே தவிர, அதற்கான வாய்ப்பிருப்பதாக தெரியவில்லையென்கிறார்கள் விடயமறிந்தவர்கள்.

கடந்த பொதுத்தேர்தலில் முதல்வர் விட்ட அறிக்கை மாற்று கட்சிக்காரர்களிற்கு வாக்களிக்க சொன்னதென தமிழரசுக்கட்சி குற்றம்சாட்ட, வல்லவர்களிற்குத் தான் வாக்களிக்க சொன்னேன், உங்கள் கட்சியில் வல்லவர்கள் இல்லையா என முதல்வர் பதில் கேள்வி கேட்க, ஏதோ நீதிமன்றத்திற்குள் சட்டத்தரணிகளின் வாதாட்டத்தை பார்க்கும் பீலிங் சனங்களிற்கு ஏற்பட்டது.

வடக்குமுதல்வர்தனிவழிபோகப் போகிறார் என அப்பொழுதே ஒரு தகவல் பரவியது. உறுதி செய்யப்படாத தகவலொன்று அப்பொழுது பரபரப்பாக அடிப் பட்டது.

தமிழ்தேசிய மக்கள் முன்னணி ஒரு ஆசனத்தை கைப்பற்றியிருந் தால் இதேவிதமான பெருமெடுப்பிலான ஒரு கூட்டணி அறிவிப்பை புலம்பெயர் தேசமொன்றில் வெளியிட ஏற்பாடு செய்யப் பட்டதாகவும், உண்மையான தமிழ் தேசிய கூட்டமைப்பு நாங்கள் தான் என அதில் உரிமை கோரியிருப்பார்கள் என்றும் ஒருதகவல் உள்ளது. அதில் முதல்வர், தமிழ் தேசிய கூட்டமைப்பின் சில அங்கத்துவ கட்சிகள் கலந்து கொள்வார்கள் என குசுகுசுக்கப்பட்டது.

எனினும் அப்பொழுது அந்ததிட்டம் சாத்தியப்படவில்லை.

**பின்னணி பத்திரிகை**

தமிழரசுக்கட்சியுடன் விக்னேஸ்வரனின் மோதல் முற்றிக்கொண்டு சென்றதையடுத்து அவரது தனி வழிப்பயணம் விரைவில் நடக்கப் போகிறதென்பது பரவலாக ஊகிக் கப்பட்டது.

இந்த சமயத்தில்த்தான் யாழில் உள்ள பத்திரிகையொன்றின் ஆசிரியர் கூட்டணி முயற்சியில் இறங்கியிருக்கிறார். வடக்கு முதல்வர், பல்வேறுகட்சிகள், சிவில் சமூகத்தினரை ஒரு இடத்தில் உட்கார வைத்து, 'தமிழ்மக்கள் பேரவை'க்கு பிள்ளையார் சுழியிடும் அவர்களது முயற்சி வெற்றிபெற்றுள்ளது.

இந்த கூட்டு உருவாகப் போவதை முன்னரே நாடிபிடித்திருந்த இந்தியத் தூதர் வை.என்.சின்ஹா அண்மையில் முதலமைச்சரை சந்தித்து, தனித்து போகும் எண்ணத்தை கைவிடுமாறு கோரியிருந்தார். அதுபோல தமிழ்தேசிய கூட்டமைப்பின் ஏனைய அங்கத்துவக்கட்சிகள் ஒவ்வொன்றையும் பல்வேறு நாடுகளின் தூதரங்கள் தனித்தனியாகதொடர்பு கொண்டு புதிய அணியில் இணைய வேண்டாம் என கேட்டுள்ளன.

**தமிழர்களின் அரசியல் போராட்டத்தில் புத்திஜீவிகள், ஆய்வாளர்கள் என்ன செய்தார்கள் என்றொரு கேள்வியை கேட்ட, உலகமே பூதக்கண்ணாடி கொண்டு தேடினாலும் எதனையும் கண்டுபிடிக்க முடியாது. இதனால்த்தான் விடுதலைப்புலிகள் இந்தவகையானவர்களை 'ஓரமா இருங்கப்பா' என ஒதுக்கிவைத்து விட்டு செயற்பட்டார்கள்.**

ஒன்று அல்லது இரண்டு வருடங்களிற்குள் தீர்வு வந்துவிடும், இந்த சமயத்தில் குழப்பிவிடாதீர்கள் என்பது அவர்களது கோரிக்கை.


இப்பொழுது தமிழர்கள் மத்தியிலுள்ள எந்தக்கட்சியும் வெளிநாட்டு தூதரகங்களை பகைத்து, அல்லது 'சொல்வழி கேளாமல்' நடக்கும் துணிவற்றவை. ஆனால் இந்த விவகாரத்தில் 'நாங்கள் கூட்டணி சேரவில்லை. ஒரு பொது மக்கள் அமைப்பில் சேர்ந்திருக்கிறோம்' என சொல்லி சமாளித்து, தமிழ் மக்கள் பேரவையில் இணைந்துள்ளன.

**'ஆளை விடுங்க சாமி' அமைப்பு**

தமிழ் மக்கள் பேரவை உறுப்பினர்கள் யாரை தொடர்பு கொண்டாலும் அவர்கள் முதலில் சொல்வது, 'நாங்கள் அரசியல் கட்சியல்ல. ஒரு அமைப்பு. தமிழர்களிற்குள் பிரிவை ஏற்படுத்த

### நேர்மறை கேள்விகள்

**தீபம்:** என்னதான் விளக்கம் சொன்னாலும் தமிழரசுக்கட்சியின் நடிவடிக்கைகளின் விளைவால்த்தான் தமிழ் மக்கள் பேரவை உருவானதென்பது பரவலான கருத்து. நீங்கள் அந்தக்கட்சியின் முக்கியஸ்தர். பேரவையில் இருப்பது தமிழரசுக்கட்சியின் உறுப்புரிமையை பாதிக்காதா?




**சி.க.சிற்றம்பலம்:** எனது 15 வயது தொடக்கம் அதாவது 1956 ஆம் ஆண்டு தொடக்கம் அரசியலிலிருக்கிறேன். மாவை, சம்பந்தர் எல்லாம் பிறகு வந்தவர்கள். எந்த கலங்கமுமில்லாமல் இதுவரை அரசியல் செய்கிறேன். இன்று கட்சி நடவடிக்கைகளில் எனக்கு திருப்தியில்லை. கடந்த ஐந்தாண்டுகளாக கட்சியின் நடவடிக்கைகளை உள்ளுக்குள் விமர்சித்து வந்திருக்கிறேன். நான் கட்சிமாறவில்லை. ஒரு அமைப்பில்த்தான் இணைந்துள்ளேன். பலகட்சிகளின் பிரதிநிதிகள் இதில் இருக்கிறார்கள். அதனால் பிரச்சனையில்லை. ஒருவேளை என்னை நீக்குவதென தமிழரசுக்கட்சி முடிவு செய்தாலும் பிரச்சனையில்லை.

**தீபம்:** தமிழ் புத்திஜீவிகள், மேல்தட்டு வர்க்கத்தினர் தமிழர்களின் போராட்டத்தில் செல்வாக்கு செலுத்துபவர்களாக ஒருகாலத்திலும் இருந்ததில்லை. அவர்களின் செயற்படாததன்மைதான் அதற்கு காரணம். இப்பொழுது உருவாகியுள்ள அணியும் கிட்டத்தட்ட அதேவிதமான அணிபோலத்தான் உள்ளது. இந்த அணியால் ஏதாவது மாற்றத்தை செய்யலாமென நினைக்கிறீர்களா?



**கோபாலபிள்ளை:** இது அரசியல் கட்சியல்ல. சில யோசனைகளை முன்வைப்போம். கருத்துக்களை உருவாக்குவோம். தமிழ் மக்களின் தேவைகள் நிமித்தமே இந்த கூட்டு உருவாகியுள்ளது. பேரவையால் மாற்றங்கள் ஏற்படுத்த முடியும்.

**தீபம்:** இனப்பிரச்சனை தீர்வு முயற்சிக்கு தமிழ்தேசிய கூட்டமைப்பு முன்வைக்கவுள்ள தீர்வுத்திட்டத்தில் தமிழ்மக்கள் பேரவை செல்வாக்கு செலுத்துமென நம்புகிறீர்களா?



**செல்வராசா கஜேந்திரன்:** புதிய அரசியல்யாப்பு எழுதும் ஏற்பாடுகள் நடக்கிறது. ரணில், சந்திரிகா, மைத்திரி ஆகியோரின் விருப்பத்திற்கு தக்கதான யாப்பு உருவாக்கப்படவுள்ளது. இதற்கு தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைவர்கள் சிலர் துணைபோகிறார்கள். அரசியலமைப்பு திருத்தம் தொடர்பான கலந்துரையாடல்களை தமிழ் சமூகத்திற்குள் நடக்கவிடாமல் சில சக்திகள் தடுக்கின்றன. அரைகுறைதீர்வொன்றை ஏற்படுத்துவதற்காகவே இந்தசதி நடக்கிறது. இதனால்த்தான் இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இந்த அமைப்பு தீர்வு வரைவொன்றை தயாரித்து, அது மக்களால் வரவேற்கப்படுமாக இருந்தால் சில தனிநபர்களால் மக்களின் விருப்பத்தை கடந்து செல்ல முடியாது.

உண்டாக்கப்பட்டதல்ல' என்பதைத்தான். சொல்லி வைத்தால்போல எல்லோரும் பேசுகிறார்கள்.

பேரவையின் முதலாவது கூட்டம் நடந்த அன்று, கூட்ட மண்டபத்திற்கு வெளியில் பத்திரிகையாளர்கள் காத்து நின்றனர். கூட்டத்தை முடித்துக் கொண்டு மண்டபத்திற்கு வெளியில் வந்த உறுப்பினர்கள், முகத்தை திருப்பிக் கொண்டு ஓட்டமும் நடையுமாக அந்த இடத்தை கடந்து சென்றுவிட்டனர். யாழ் பத்திரிகைகள் விடயத்தை வில்லங்கமாக்கிவிடும் என்று அப்படியொரு முன்னேற்பாடாக நடந்தார்களாம்.

இப்பொழுது உருவாகியிருப்பது ஒரு அரசியல் கூட்டணியல்ல என்பதைத்தான் அங்கத்துவர்கள் எல்லோரும் திரும்பத் திரும்ப வலியுறுத்துகிறார்கள். சிவில் சமூகம் மற்றும் அரசியல் கட்சிகள் இணைந்து உருவாக்கியுள்ள மக்கள் அமைப்பு. இது யாருக்கும் எதிரான அரசியல் கூட்டல்ல என கூறுகிறார்கள்.

ஆனால்இந்தகூட்டுஏன்ஏற்பட்டதென்பது எல்லாரும் அறிந்த இரகசியம்தான். தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் சமத்துவம் இல்லையென்ற சர்ச்சைதான் இந்த அமைப்புவரை வந்துள்ளது. இதுநாளையே அரசியல் கூட்டாக மாறும் எனபதற்கு எந்த உத்தரவாதமும் இல்லையென்றும் ஒரு தரப்பு கூறுகிறது.

இந்த அமைப்பை மக்கள் எப்படி பார்க்கிறார்கள் என்பதை உடனடியாக சொல்ல முடியவில்லை. சிறிதகாலம் பொறுத்திருந்துதான் மக்களின் எண்ணத்தை நாடி பிடிக்கலாம்.

இந்த அமைப்பின் தமிழ்தேசிய கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளான தமிழரசுக்கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட் அமைப்பின் பிரதிநிதிகள் உள்ளனர். ஆனால் ரெலோ மட்டும் கிடையாது. கேட்டால், எமக்கு அழைப்பு வரவில்லையென்கிறார்கள் ரெலோ தரப்பு.

ஆனால், ஏற்பாட்டாளர்களை சந்திக்காமல் ரெலோ கட்சி போக்கு கட்டியதாகவும், அதனாலேயே அவர்களை ஏற்பாட்டாளர்கள் சந்திக்கவில்லையென்றும் ஒரு தரப்பு கூறுகிறது.

### வெள்ளையாக இருப்பவன் பொய் சொல்ல மாட்டான்

வடிவேலுவின் பிரபல நகைச் சுவை வசனமொன்றுள்ளது. 'வெள்ளையாக இருப்பவன் பொய் சொல்ல மாட்டான்' என்ற அந்த வசனத்தை, 'கோட் சூட் போட்டவன் வீதிக்கிறங்க மாட்டான்' என கொஞ்சம் மாற்றினால், அதுவும் சத்தியமான வார்த்தைதான்.

தமிழர்களின் அரசியல் போராட்டத்தில் புத்திஜீவிகள், ஆய்வாளர்கள் என்ன செய்தார்கள் என்றொரு கேள்வியை கேட்ட, உலகமே பூதக்கண்ணாடி கொண்டு தேடினாலும் எதனையும் கண்டுபிடிக்க முடியாது. இதனால்த்தான் விடுதலைப்புலிகள் இந்த வகையானவர்களை 'ஓரமா இருங்கப்பா' என ஒதுக்கிவைத்துவிட்டு செயற்பட்டார்கள்.

பொதவாகவே புத்திஜீவிகள் எனப்படுபவர்கள் நன்றாக படித்து, வெளிநாட்டிலோ உள்நாட்டிலோ நல்ல தொழில் பார்த்து பிள்ளைகளிற்கும் பாதுகாப்பான வாழ்க்கை அமைத்துக் கொடுத்துவிட்டு, இறுதிக்காலத்தில் அரசியல் பேசுவார்கள்.

தமிழ் மக்கள் பேரவையில் பிரதான பலவீனம் என்னவென்று கேட்டால், கண்ணைமூடிக் கொண்டு இதை சொல்லிவிடலாம். புலமையாளர்கள் மட்டும் ஒரு அரசியல் இயக்கத்தை முன்னகர்த்த முடியாது. ஏனெனில் அவர்கள் செயற்பாட்டாளர்கள் அல்ல. சொல்லுக்கும் செயலிற்கு மிடையிலான எல்லையை கடக்கும் சூட்சுமம் அறியாதவர்கள். அவர்களால் வெகுஜன அரசியலை முன்னெடுக்கவே முடியாது.

பேரவையின் அங்கத்தவர்களில் பெரும்பாலானவர்களின் அடையாளம் சிவில் சமூகம் என்பதுதான். தமிழர்கள் மத்தியில் சிவில் சமூகங்கள் என்ற பெயரில் இயங்கியவை பல கிறீஸ் மனிதனைப்போல அடையாளம் தெரியாதவை. மறைந்திருந்து அறிக்கைவிட்டவை. சிவில் சமூக அங்கத்துவர்கள் என்ற பெயரில் பலர் இந்த அமைப்பில் உள்ளனர். அதைவிட, இதுவரை தமிழர்களின் அரசியல் போராட்டத்தில் ஒரு துரும்பைக்கூட தூக்கிப் போட்டிராத வைத்தியர்கள் பலரும் அங்கம் வகிக்கிறார்கள்.

இது அரசியல் இயக்கமல்ல, வெறுமனே அரசியல் தீர்வு திட்டமொன்றை உருவாக்குவதுதான் பேரவையின் நோக்கமெனில், இப்படியொரு அமைப்பை உருவாக்காமல் தமிழ்தேசிய கூட்டமைப்புடனேயே இணைந்து அவர்கள் செயற்பட்டிருக்கலாமே?

### எதிர்க்கடை

கீரைக்கடைக்கும் எதிர்க்கடை வேண்டுமென்று நம்முன்னோர்கள் காரணமில்லாமல் சொல்லிவிட்டு செல்லவில்லை. அரசியலிற்கும் இது பொருத்தம். அரசியல் பன்முகத்தன்மைதான் ஆரோக்கியமான அரசியலின் முதல் சூட்சுமம். ஆகவே, பலமான எதிரெதிர் முகாம்கள் அமைவது மக்களின் அரசியலிற்கு நல்லது. அரசியலை வழிப்படுத்தவும் அது உதவும்.

தமிழ் மக்கள் பேரவையை ஆகா ஓகோவென தலையில் தூக்கி கொண்டாடியோ, ஒரேயடியாக முகத்தை திருப்பி வெறுக்கவோ வேண்டியதில்லை. பொறுத்திருந்து பார்க்கலாம். மக்கள் நலன் அமைப்பெனில் வரலாறு அதனை வாழ வைக்கும். அல்லது குப்பைக்கூடைக்குள் வீசிவிடும்.

வரலாறுதானே சிறந்த ஆசான்!

தீபம் குழு






# ~~சிறி~~ ரெலோ

அரசியலில் நண்பனுமில்லை எதிரியுமில்லை என்பார்கள். இதற்கு ஆகச்சிறந்த உதாரணமாகியுள்ளதுரெலோ கட்சி.ஒருகாலத்தில் எதிரெதிர் அணியில் நின்றவர்கள் இப்பொழுது 'நாங்களெல்லாம் ஒன்றுக்குள் ஒன்று' என கூட்டாக திரிய ஆரம்பித்துள்ளதை மற்றக் கட்சிக்காரர்கள் கடைக்கண்ணால் நோட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழர்களின் இனப்பிரச்சனையை தீர்க்காவிட்டால் சாகும்வரை உண்ணாவிரதம்இருந்து உயிர்துறப்பேன் என சத்தமாக அறிக்கைவிட்டு, ஊரெல்லாம் போஸ்ரர் ஒட்டினார் செல்வம் அடைக்கலநாதன். இதுநடந்தது மகிந்த ராஜபக்சவின் காலத்தில். அப்பொழுது மகிந்த ராஜபக்சவின் கைக்குள் இருந்த தமிழ்அணியின் பிரதானிகளிலொருவர் உதயராசா. சிறிரெலோ என்ற கட்சியின் தலைவர். இரண்டு பிரிவாக இருந்த ரெலோ ஒன்றாகி, தலைவர்கள் கைகோர்க்கிறார்கள் என்பதே உள்வீட்டு தகவல்கள். இரண்டு தரப்பும் பரபரப்பு பேச்சுக்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். விரைவில் உத்தியோகபூர்வ அறிவித்தல் வருமாம்.

### 'சொல்லை' மறந்த செல்வம்

தமிழர்களின் போராட்டம் ஆயுதப்போராக பரிணமிக்க ஆரம்பித்த காலத்தில் தோன்றிய முப்பது சொச்ச இயங்களில் ஒன்று ரெலோ. அப்பொழுதிருந்த பெரிய இயக்கங்களில் ஒன்று. நல்ல வளமாகவும் இருந்தது. இப்பொழுது கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக இப்படி வந்து நிற்கிறது.

ரெலோவின் ஆரம்ப தலைவர் சிறிசபாரத்தினம் கொல்லப்பட்ட பின்னர் தலைமைப்பதவிக்கு வந்தவர்தான் தற்போதைய தலைவர் செல்வம் அடைக்கலநாதன். 1990களின் பின்னர் அது கிட்டத்தட்ட சிறியகுழுவாகத்தான் இயங்கத் தொடங்கியது. அந்த அமைப்பிலிருந்தவர்களில் கணிசமானவர்கள் பொதுவாழ்க்கைக்கு திரும்பி உள்ளூரில் வாழ, கொஞ்சப்பேர் வெளிநாடுகளிற்கு சென்றனர். மிகுதியான சொற்பபேர்தான் அந்த அமைப்பில் தொடர்ந்து இயங்கினார்கள்.

2000 களின் தொடக்கத்தில் புலிகள் தமிழ்தேசிய கூட்டமைப்பை ஸ்தாபித்தபோது ரெலோவிற்கும் அங்கத்துவம் வழங்கினார்கள். அதுவரை அரசாங்கத்தின் தயவில் இயங்கியது, வவுனியாவில் 'ரணகளமாக' நடந்து கொண்டது போன்ற பல குற்றச்சாட்டுகளிருந்து பாவமன்னிப்பு வழங்கியது அந்த அங்கத்துவம். அதன்பின்னர் அதிதீவிர தமிழ்தேசியகட்சியானது ரெலோ.

இதன் உச்சம்தான் தீர்வு தராவிட்டால் சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பேன் என கடந்த ஆண்டில் அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் விட்ட அறிக்கை. அதனை போஸ்ரர் அடித்து வவுனியா, மன்னாரில் சரமாரியாக ஒட்டி அமர்களப்படுத்தினார்கள் கட்சித் தொண்டர்கள். பின்னர் அதனை எல்லோருமாக சேர்ந்து மறந்தது வேறுகதை.



அவர் அறிக்கைவிட்ட திகதியில் அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் வவுனியா செல்லப்பிள்ளை உதயராசா. அவர் சிறிரெலோ என்ற கட்சியின் தலைவர்.

### பசையாக ஒட்டிய பசில்

ஆரம்பகால ரெலோ போராளி. பின்னர் அதைவிட்டுவிட்டு வெளிநாடு சென்றார். பின்னர் திரும்பி வந்து கட்சியை ஆரம்பித்தார். அவரது வரவு குறித்த பல்வேறுவிதமான தகவல்கள் ஏற்கனவே ஊடகங்களில் உலாவியிருந்தது. மகிந்த அரசின் செல்லப்பிள்ளையாக திரும்பிவந்தார், பசிலுடன் நெருக்கமாக இருந்தார் என பலகதைகள் பரபரப்பாக ஓடியது.

சிறிரெலோ கட்சிபற்றிய அண்மைய பரபரப்பு யாழ்பல்கலைகழகத்துடன் தொடர்புடையது. சிலவருடங்களின் முன்னர் யாழ்ப்பாண பல்கலைகழக மாணவர்களை 'ஒருவழிக்கு' கொண்டுவர அப்போதைய மகிந்த அரசு ஒரு 'ஒப்ரேசனை' ஆரம்பித்தது. அந்த ஆரம்பத்துடன் சிறிரெலோ தொடர்புபட்டிருந்தது. பல்கலைகழகத்திற்கு அண்மையில்திறந்து ஒருநாளேயான அந்தகட்சி அலுவலகத்தில் மீது பெற்றோல் குண்டு தாக்குதல் நடந்து, அதனுடன் தொடர்புடையவர்களை கைது செய்கிறோம் என்று 'கிடுக்குப்பிடி' ஆரம்பித்ததும் ஒருகாலத்தின் பரபரப்பு செய்திகள். அலுவலகத் திறப்பையும், மாணவர்கள் கைதையும் முடிச்சுப்போட்டு ஒரு தரப்பு பேசியதும், அது மொட்டந்தலைக்கும் முழங்காலிற்கும் முடிச்சுப் போடும் விசயம் என சிறிரெலோ மறுத்ததும் பின்னர் நடந்தவை.

பசில் ராஜபக்சவுடன் சிறிரெலோவின் தலைவருக்கு நல்ல நெருக்கமிருந்தது என்று பரவலாக கூறப்படுகிறது. மகிந்த ஆட்சியில் தேர்தல் விவகாரங்களை கையாண்டது பசில். அவரின்றி அணுவும் அசையாது. அப்போது நடந்த வடமாகாணசபை தேர்தலில் பிரமாண்ட ஏற்பாடுகளுடன் அரசதரப்பு களமிறங்கியது. மகிந்த கூட்டணியில் களமிறங்கிய உதராசா மயிரிழையில் தோல்வியடைந்தார். மீண்டும் சளைக்காத விக்கிரமாதித்தனாக கடந்த பொதுத் தேர்தலிலும் களமிறங்கினார். அப்பொழுது மகிந்த ராஜபக்சவிற்கு எதிராக ஊரே கைகோர்த்தது. உதயராசா மட்டும் மகிந்த அணியுடன் கைகோர்த்தார். மீண்டும் தோல்வி.

### கத்தரிக்காய் தத்துவம்

அந்த தேர்தலின்போதே பலர் அவருக்கு ஆலோசனை சொல்லியுள்ளனர், செல்வம் ரெலோவுடன் இணைந்து கொள்ளலாம் என. எனினும், வெற்றிபெறலாமென அவருக்கு நிறைய நம்பிக்கை இருந்ததால் அப்பொழுது அந்தஎண்ணத்தை தட்டிக்கழித்து விட்டார். எனினும் தேர்தல் தோல்வியின் பின்னர் அந்த எண்ணத்தை தூசு தட்டி இணைவு பேச்சுக்களை துரிதப்படுத்தியுள்ளார்.

இரண்டு தரப்பும் பலசுற்று பேச்சுக்கள் நடத்தி, இணையலாம் என்ற நிலைக்கு வந்துள்ளதாக உள்வீட்டு தகவல்கள் கூறுகின்றன. இணைகிறோம் என பகிரங்கமாக இதுவரை அறிவிக்கவில்லையே தவிர, மற்றும்படி இரண்டு தரப்பும் மிக நெருக்கமாக உள்ளதாம். விரைவில் இணைவு அறிவித்தல் வருமென தெரிகிறது.

இதேவேளை, இந்த இணைவிற்கு செல்வம் தரப்பிற்குள் சில எதிர்ப்பும் இல்லாமலில்லை. சிறிரெலோவை இணைத்தால் கட்சி பற்றிய வேறுவிதமான அபிப்பிராயம் ஏற்பட்டுவிடுமென்ற சில எதிர்க் குரல்கள் உள்ளுக்குள் இல்லாமலில்லை.

இப்போதைய நிலைமையில் செல்வம் தரப்பு இணைவை பகிரங்கமாக அறிவிக்கவில்லை. முதற்கட்ட பேச்சு நடந்துள்ளது என சொல்லிவிட்டு ஒதுங்கிக் கொள்கிறார்கள்.

சிறிரெலோ கட்சியை கலைத்துவிட்டு, அதன் உறுப்பினர்கள் ரெலோவில் இணைந்து கொள்ள விரும்பம் தெரிவித்தார்கள். நாங்கள் பரிசீலித்து, முதற்கட்டப் பேச்சை முடித்துள்ளோம். அடுத்தடுத்த கட்டங்களில் பேச்சு வெற்றியாக அமைந்தால் பகிரங்கமாக அறிவிப்போம் என எச்சரிக்கையாக பேசினார்கள். அவர்களின் பேச்சின் எச்சரிக்கையிலேயே புரிந்தது, 'அமுக்கமாக' விசயத்தை முடிக்க திட்டமிட்டுள்ளார்கள் என்பது.

மறுவளமாக சிறிரெலோ கூறுகிறது, உறுப்பினர்களின் விருப்பம் அப்படியுள்ளது. இதனால் உறுப்பினர் மட்ட பேச்சு நடக்கிறது. விரைவில் எல்லாம் தெரியவரும் என.

'கத்தரிக்காய் மலிந்தால் சந்தைக்கு வரும்' என ஊரில் விசயமில்லாமலா சொல்லி வைத்தார்கள்!

**ஆரம்பகால ரெலோ போராளி. பின்னர் அதைவிட்டுவிட்டு வெளி நாடு சென்றார். பின்னர் திரும்பி வந்து கட்சியை ஆரம்பித்தார். அவரது வரவு குறித்த பல்வேறுவிதமான தகவல்கள் ஏற்கனவே ஊடகங்களில் உலாவியிருந்தது. மகிந்த அரசின் செல்லப்பிள்ளை யாக திரும்பிவந்தார்.**

**செல்வம் அடைக்கலநாதன் தலைவர், ரெலோ**

சிறிரெலோவை கலைத்துவிட்டு எம்முடன் இணைவதாக அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். அதுபற்றி ஆராய்ந்துள்ளோம். மத்தியகுழுதான் இறுதி முடிவெடுக்க வேண்டும். மத்தியகுழு அங்கீகரித்தால் அவர்களை இணைத்துக் கொள்வோம். அவ்வளவுதான்.



**உதயராசா தலைவர், சிறிரெலோ**

இணைவுக்கான முயற்சிகள் நடக்கிறதுதான். இரண்டு கட்சிகளும் இணையலாமென இருதரப்பு உறுப்பினர்களும் விரும்பியதால் சில மட்டங்களில் பேச்சுக்கள் நடக்கிறது. ஆனால் தலைவர்கள் மட்டத்தில் இன்னும் பேச்சு நடக்கவில்லை. இதுவரையான பேச்சுக்கள் சுமுகமாகவே முடிந்துள்ளன. இனியும் சுமுகமாகவே எல்லாம் நடக்கும். இணைவுப் பேச்சு வெற்றியளிக்குமென்பது நம்பிக்கை.



இந்த பரபரப்பிற்குள் இன்னொரு விவகாரத்திலும் ரெலோவை ஊடகங்கள் வறுத்தெடுக்கின்றன. வரவு செலவுத்திட்ட வாக்கெடுப்பில் கலந்து கொள்ளமாட்டேன், அது கட்சியின் மத்தியகுழுவின் முடிவென கட்சித்தலைவர் செல்வம் அடைக்கலநாதன் சூடாக அறிக்கைவிட்டுக் கொண்டிருக்க, அந்தக்கட்சியின் கிழக்கு எம்.பி கோடீஸ்வரன் வரவு செலவுத்திட்டத்தை ஆதரித்து வாக்களித்துள்ளார். அதற்கடுத்த சம்பவம்தான் எல்லாவற்றையும் தூக்கிச்சாப்பிடும் சம்பவம். வரவு செலவுத்திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதும், சபாநாயகரின் இல்லத்தில் நடந்த சம்பிரதாய இராப்போசன விருந்திலும் செல்வம் அடைக்கலநாதன் கலந்து கொண்டிருந்தார். இந்தப்படங்கள் இப்பொழுது வெளியாகி சர்ச்சையை தோற்றுவித்துள்ளன.



1960 ஆம் ஆண்டு வீரகேசரிப் பத்திரிகையில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தின் போது அங்கு வேலையை இழந்து யாழ்ப்பாணம் வந்து ஈழநாடு பத்திரிகையில் இணைந்து கொண்டேன்

# 'மாமனிதனால்' நெகிழ்ந்த கோபு ஐயா

சரண்யா

தமிழ் ஊடகத்துறையில் கோபு ஐயாவை தெரியாதவர்கள் இருக்க முடியாது. பொதுவாக ஊடகத்துறையில் இருப்பவர்களை மக்கள் அறிவதில்லை. ஆனால் கோபு ஐயா விடயத்தில் நேர்மாறு. அவரது ஆளுமை அவரை வாசகர்களிடமும் கொண்டு சென்றது. அப்படியான பத்திரிகை ஆளுமைகள் நம்மத்தியில் அரிது.

அண்மையில் தொல்புரம் சிவபூமியில் கோபு ஐயாவை சந்திக்க சென்றோம்.

ஊடகத்துறைக்கான பிரவேசம் எவ்வாறு இருந்தது?

யாழ்ப்பாணம் கன்னாதிட்டியை பிறப்பிடமாக கொண்ட கோபு ஐயா, 1953ஆம் ஆண்டு ஒப்பு நோக்குனராக வீரகேசரி பத்திரிகையில் பத்திரிகை வாழ்க்கையை ஆரம்பித்தார். உதவி ஆசிரியராக இருக்கின்ற காலப்பகுதியில் 72.50 சதமே முதல் கிடைத்த சம்பளம். அதனைவிட இரவு வேலைகள் செய்தால் 1ரூபா அதிகமாக கிடைக்கும் என்ற காரணத்தினால் இரவு வேலைகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்வேன் என்கிறார்.

'அன்றைய காலத்தில் வீரகேசரிக்கு அதிகளவான வாசகர்கள் மலையகத்திலேயே இருந்தனர். அதை நம்மவர் பக்கம் திருப்புவதற்காக நமது பிரச்சினைகள் தொடர்பிலும் செய்திகளையும் கட்டுரைகளையும் எழுதினேன்.

அப்போது இந்திய எழுத்தாளர் சரத் சந்திர சட்டர்ஷி எழுதிய புத்தகங்கள் அதிகளவாக எனக்கு கிடைத்தன. நான் அவைகளை அதிகளவாக படிப்பதுண்டு.

1954ஆம் ஆண்டு வீரகேசரிப் பத்திரிகையில் உதவி ஆசிரியராக பதவியுயர்வு பெற்றேன். கலையரங்கம் அன்று உள்ளூர் கலைநிகழ்வுகளை பிரதிபலிப்பதாக அமைந்திருந்தது அன்று அதற்கொருதனிமவுது இருந்தது. ஊர்சுற்றி பதிலளிக்கிறார் என்று வாசகர்களின் கேள்விகளுக்கு பதில்களை எழுதுவேன்.

1960 ஆம் ஆண்டு வீரகேசரிப் பத்திரிகையில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தின் போது அங்கு வேலையை இழந்து யாழ்ப்பாணம் வந்து ஈழநாடு பத்திரிகையில் இணைந்து கொண்டேன்' என்றார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகிய காலைக்கதிர், செய்திக் கதிர், ஈழமுரசு, ஈழநாதம் ஆகிய பத்திரிகைகளிலும் மட்டக்களப்பில் இருந்து வெளிவரும் தினக்கதிர் பத்திரிகையிலும் ஆசிரியராக பணி புரிந்துள்ளார். 1987 இல் இலங்கை இந்திய ஒப்பந்தத்தையடுத்து இந்திய அமைதிப்படை வடக்கு, கிழக்கு மாகணங்களில் நிலைகொண்டிருந்த நேரத்தில் "சலோ சலோ ஜல்தி சலோ" என்ற தலைப்பில் வடக்கிலிருந்து இந்திய இராணுவமே வெளியேறு என்று அவர் எழுதிய ஆசிரியர் தலையங்கம் அப்போது பரவலான கவனத்தை ஈர்த்தது.

தினக்கதிர் பத்திரிகையில் எழுதிய ஆசிரிய தலையங்கங்களின் தொகுப்பாக "அந்த ஒரு உயிர் தானா உயிர்" என்ற நூல் வெளியாகியுள்ளது. அப்படியான தொகுப்பொன்றை மீண்டும் வெளியிட வேண்டுமென்று விரும்புவதாக சொன்னார். இன்று ஊடகங்கள் விற்பனையை மாத்திரம் மையமாக கொண்டுள்ளன என்ற வருத்தம் அவரிடமுள்ளது.

பல்வேறு விருதுகள் அவருக்கு வழங்கப்பட்டுள்ளன. என்றாலும், அவர் இன்றும் நெகிழ்ச்சியாக நினைவுகூர்வது மாமனிதர் விருதைத்தான். எனக்கு கிடைத்த கௌரவம் இனி ஒரு தமிழனுக்கு கிடைப்பதற்கு சந்தர்ப்பம் இல்லை என்று நெகிழ்ச்சியுடன் கூறினார்.



## 1-ம் பக்க தொடர்ச்சி

மாகாணசபை உறுப்பினர் ஆயுப் அஸ்மின் தங்களிடம் வாங்கிய பணத்தை தரவில்லை, நீண்ட நாட்களாக ஏமாற்றிவருகிறார் என்பது பெண்களின் பரபரப்பு குற்றச்சாட்டு. எனினும், அஸ்மின் தரப்பு அதனை மறுக்கிறது. தான் யாரிடமும் கைநீட்டி பணம் வாங்க வில்லை, பள்ளிவாசல் வாங்கிய பணத்திற்கு பொறுப்பு நின்றது மட்டுமே நான் செய்ததென்பது அவர்கள் வாதம்.

எனினும், மாகாணசபை உறுப்பினர் அந்தப்பெண்களிற்கு பணம்கொடுக்க வேண்டுமென்பதே உண்மையென்கிறார்கள் பள்ளி வாசல் தரப்பினரும். பணம் கொடுக்கத் தேவையில்லையென் றால், எதற்காக மாகாணசபைக்குள் வைத்து பணம் தருகிறேன் என வாக்களித்தார் என்பது இரண்டு பெண்களின் கேள்வியும்.

வடமாகாணசபையின் 40வது அமர்வுகள் கடந்த 10ம் திகதி கைதடியில் நடந்து கொண்டிருந்தது. அப்பொழுது இரண்டு பெண்கள் திடீரென மாகாணசபைக்குள் நுழைந்தனர். வடக்கு எதிர்கட்சி தலைவரின் அலுவலகத்திற்குள்





**'நாலு வருசமாக பணத்தை தராமல் இழுத்தடித்து கொண்டி ருக்கிறீர்களே.. அந்தப்பணத்தை தந்தால் ஏன் இப்படி உங்களின் பின்னால் இழுபடுகிறோம்' என அவர்கள் பரபரப்பு குற்றம்சாட்ட, மாகாணசபைக்குள் 'ஆர்வம்' தொற்றிக் கொண்டது.**

நுழைந்து அவரடன் ஏதோ பேசினார்கள். மாகாண சபையின் பாதுகாப்பு ஏற்பாடுகளை உடைத்துக் கொண்டு எப்படி உள்நுழைந்தார்கள் என்பதுதான் புரியாதபுதிராக உள்ளது.

எதிர்கட்சி தலைவரை சந்தித்து பேசிய பின்னர், அவரது அலுவல கத்தை விட்டு பெண்கள் இருவரும் வெளியில் வந்தனர். அப்பொழுது திடீரென அங்கு வந்த உறுப்பினர் ஆயுப் அஸ்மின், 'ஏன் இங்கே வந்தீர்கள்?, யார் உங்களை அனுப்பியது?' என பதற்றக் கேள்விகள் கேட்கத் தொடங்கினார்.

அந்த வார்த்தைகளுடன் தொடங்கியதுதான். அதன்பின்னர் அந்தப்பகுதியே பரபரப்பானது. பெண்கள் இருவரும் அடுக்கடுக்காக குற்றச்சாட்டுக்களை சுமத்தி குமுறத் தொடங்கிவிட்டனர்.

'நாலு வருசமாக பணத்தை தராமல் இழுத்தடித்து கொண்டி ருக்கிறீர்களே.. அந்தப்பணத்தை தந்தால் ஏன் இப்படி உங்களின் பின்னால் இழுபடுகிறோம்' என அவர்கள் பரபரப்பு குற்றம்சாட்ட, மாகாணசபைக்குள் 'ஆர்வம்' தொற்றிக் கொண்டது. என்ன ஏதென பலரும் காது கொடுக்க ஆரம்பித்தனர்.

விடயம் வில்லங்கமாகிக் கொண்டே சென்றது. பெண்களின் குற்றச்சாட்டு கூப்பாடாக மாறத் தொடங்கியது. ஒரு பக்கம் பெண்களின் விவகாரம் மறுபக்கம் மாகாணசபை அமர்வுகள்.

பெண்களின் குரல் ஓங்கத் தொடங்கியதும், அவர்களை அங்கிருந்து போகுமாறு அஸ்மின் வற்புறுத்தத் தொடங்கினார். 'அந்தப் பணம் பள்ளிவாசல் ஒன்றுதான் உங்களிற்கு தர வேண்டும். நான் அதை நான்கு வருடங்களின் முன் பொறுப்பு நின்றேன். அந்தப் பணத்தை என்னால் தரமுடியாது' என அஸ்மின் கூற, அதற்கு பெண்கள் தரப்பு பதில்கொடுக்க, எகிறல் ஆரம்பித்தது.

'அது பள்ளிவாசல் எமக்கு தர வேண்டிய பணமல்ல. பள்ளிக்கும் அதற்கும் தொடர்பில்லை. நீங்கள் எங்களை ஏமாற்றுகிறீர்கள். போனில் தொடர்பு எடுத்தாலும் பதில் சொல்கிறீர்கள் இல்லை. உங்களை தேடித்தேடி களைத்து விட்டோம். அதனால்த்தான் இந்தசபையில் நியாயம் கேட்க வந்தோம்' என அவர்கள் கொதிக்க, கைதடி கலவரபூமியாகியது.

நிலைமை மோசமாவதை உணர்ந்த அஸ்மின், பக்கத்தில் செய்திசேகரித்து கொண்டிருந்த ஊடகவியாளர் ஒருவரின் உதவியை நாடியுள்ளார். 'என்ன பாடென்றாலும் பட்டு, அவர்களை அனுப்பிவிடுங்கள். பணத்திற்கு நான் ஏற்பாடு செய்கிறேன்' என அஸ்மின் தடாலடியாக அவரிடம் சரணடைந்துள்ளார்.

ஊடகவியலாளரும் நிலை மையை சமாளிக்க முயன்றுள்ளார். எனினும் பெண்களின் பிடி உடும்புப் பிடியாக இருந்தது. அங்கிருந்து நகர மறுத்துவிட்டனர். இதற்குள், மாகாணசபை உறுப்பினர் சயந்த னும் அஸ்மின் சார்பில் களமிறங் கினார். 'ஏன் இந்தப் பெண்ணை உள்ளே அனுப்பினீர்கள்' என பாது காப்பு ஊழியர் மீது சீறிப்பாய்ந்தார்.

பெண்களின் பிடியும் இளக வில்லை. 'இந்த கொடுக்கல் வாங்கலில் தமக்கு சம்பந்தமில்லை யென பள்ளி நர்வாகம் கைவிரித்து விட்டது. பணம் கிடைக்காமல் இங்கிருந்து போக மாட்டோம்' என அடம்பிடிக்க ஆரம்பித்தனர்.

நிலைமையை சமாளிக்க முடியாமல் போனதும், பெண் களுடன் சமரசத்திற்கு வந்தார் அஸ்மின். தனியறைக்கு பெண்கள் இருவரையும்அழைத்து சென்றார். மத்தியஸ்தராக அந்த ஊடக வியலாளரையும் அழைத்தார். அன்று மாலையே பெண்களின் பணப்பிரச்சனையை தீர்ப்ப தாகவும், ஊடகவியலாளர் அதற்கு சாட்சியாக இருப்பார் என்றும் அஸ்மின் கூறினார்.

இதன்பின்னர்தான் பெண்கள் அமைதியடைந்து வெளியேறி னார்கள். பெண்கள் வெளியேறி விட்டார்களா என நிமிடத்திற் கொருமுறை ஊடகவியலாளரிடம் குறுஞ்செய்தியில் அஸ்மின் பதற்றத்துடன் வினாவிக் கொண் டிருந்த சுவாரஸ்யம் எல்லாம் நடந்தது.

பின்னர் அந்த ஊடகவியலா ளரை தொலைபேசியில் அழைத்து, 'அராலி வீதியிலுள்ள அபூபக்கர் பள்ளிவாசலிற்கு அந்தப் பெண்கள் இருவரையும் அழைத்துக் கொண்டு வாருங்கள். அந்தக்கணக்கை முடித்து விடுகிறேன்' என கூறி யுள்ளார்.

அஸ்மினின் பேச்சை நம்பிய இரண்டு பெண்களும் மாலையில் பள்ளிவாசலிற்கு சென்றுள்ளனர். ஊடகவியலாளரும் அங்கு சென்றிருக்கிறார். மாகாணசபை உறுப்பினர் வருவார் என அவர்கள் காத்திருந்தார்கள், காத்திருந்தார்கள். காத்திருப்பின் எல்லைவரை காத்தி ருந்திருக்கிறார்கள். இரவு எட்டுமணி யாகியும் அஸ்மின் அங்கு செல்ல வில்லை. பின்னர் ஊடக வியலாள ருடன் தொலைபேசியில் இதுபற்றி பேசியபோது 'அந்த விவகாரத்தை இத்துடன் விட்டுவிடப் போகிறேன்' எனக்கூறி தொலைபேசியை நிறுத்திவிட்டார் என்கிறார்கள்.


எது எப்படியோ, இது சாதாரண பிரச்சனையென்றோ அல்லது இலகுவில் முடியும் பிரச்சனை யென்றோ கருத முடியவில்லை. அடுத்துவரும் நாட்களில் இந்த விவகாரத்தில் புதிய பூதங்கள் கிளம்பலாம்.

**சிகான்**

**மாகாண சபை உறுப்பினர் எனது கணவனிடம் பெற்ற கடனை தராமல் 4 வருடங்களாக ஏமாற்றுகிறார். தேடிச்சென்றால் அவரை கண்டு பிடிக்க முடியவில்லை. தொலைபேசிக்கும் பதில ளிப்பதில்லை. அவரை சந்தித்து பணத்தை கேட்க வேறுவழியில்லையென்பதால்த் தான் மாகாண சபைக்கு சென்றேன்.**

**இந்த குற்றச்சாட்டுக்களை ஆயுப் அஸ்மின் தரப்பு நிராகரித்துள்ளது. தம்மீது சேறுபூசுவதற்காக குழுவொன்று வரிந்து கட்டிக்கொண்டு களமிறங்கியுள்ளது என்பது அவர்களின் வாதம். இந்தக்குற்றச்சாட்டுக்களின் பின்னணி, யாழ்ப்பாண முஸ்லீம்களின் பொதுச்சொத்தை சூறையாடும் நோக்கம் கொண்டதென அவர்கள் கூறுகிறார்கள்.**

**பெண்ணின் குற்றச்சாட்டின்படி மாகாண சபை உறுப்பினர் 80 ஆயிரம்ரூபா பணத்தை கொடுக்க வேண்டியுள்ளது.**



Hon.Azmin Aiyoob Member NPC

வடக்கு மாகாண சபை

Northern Provincial Council

14-12-2015

332, Muslim College Road, Muslim Ward, Jaffna, 0770525391 0778570307


ஜோன் எலெக்ரிக் சென்ரர்

JOHN ELECTRIC CENTER

Dealers: S.Lon Pipes, Electrical Goods & Motor Pump

For: Electrical Plumbing & Antena Fitting, Contractors & Motor Winding.



வடமாகாண கராத்தே சம்மேளனத்தால் நடத்தப்பட்ட கராத்தே தொடரில் 7 வயது காட்டாப் பிரிவில் வவுனியா மாவட்டத்தை சேர்ந்த எஸ்.சரன் தங்கப்பதக்கம் வென்றுள்ளார். 21 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கான காட்டா பிரிவில் அவரது தாயார் திருமதி மாலதி முரளியும் தங்கம் வென்று அசத்தியுள்ளார்.



வெல்லாவெளி மண்டூர் பிரதானவீதியில் கனரக வாகனம் ஒன்று குடைசாய்ந்துள்ளது. பாலத் திருத்த வேலைக்காக அமைக்கப்பட்ட தற்காலிக வீதியூடாக சென்று கொண்டிருந்த வாகனமே குடைசாய்ந்துள்ளது.






இவ்வருடத்திற்கான சிவனொளிபாதமலை யாத்திரை பூரணைதினமான கடந்த 24ம் திகதி ஆரம்பமாகியது. பெல்மதுளை கல்பொத்தாவல ரஜமஹா விகாரையிலிருந்து புறப்பட்ட விசேட வாகனப் பேரணி கித்துல்கல அட்டன் நோர்வூட் மஸ்கெலியா ஊடாக சென்று நல்லதண்ணியைச் சென்றடைந்தது. அடுத்த வருடம் மே மாதம் வரை சிவனொளிபாதமலைக்கான யாத்திரை நடைபெறும்.











# மாட்டு வண்டில் சவாரி

சி.திவாகரன்
thivaharan07@gmail.com

பல்சர், ஹரிஷ்மா பைக்குகளில் இன்றைய இளசுகள் சீறிப்பாய்வதை பார்த்து வாய்பிளப்பவர்கள், அந்த பைக்குகளின் சிசிக்கு நிகரான சக்தியுடன் பாயும் காளைகளின் ஓட்டப்பந்தயத்தை பார்த்திருக்க வாய்ப்பில்லை. மாட்டு வண்டிச்சவாரி பார்ப்பதற்கு அரிதான சங்கதியாக நம்மத்தியில் மாறிச் சென்று கொண்டிருப்பதுதான் அதற்கு காரணம்.

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளின் முதன்மையானதான மாட்டுவண்டிச்சவாரி காணாமல்போய்க்கொண்டிருப்பது உண்மையில் பேரிழப்பு. நவீன உலகம் அதனை கைவிட்டு சென்று கொண்டிருப்பதை கையாலாகாதவர்களாக பார்த்துக் கொண்டிருக்கிறோம். நமது அடையாளங்களை மீட்கும் ஒரு முயற்சியாக, மூத்த சவாரிக்காரரான திருபாலசிங்கத்தைச் சந்தித்தோம். மாட்டுவண்டிச் சவாரியின் வரலாறு, நுணுக்கம், களத்திற்கு வெளியிலான உலகம் என அனைத்தையும் விரல்நுனியில் வைத்திருந்தவர் சொன்னவற்றின் சுருக்கமிது.

நமது முன்னவர்கள் போக்குவரத்திற்கு மாட்டு வண்டில்களையே பயன்படுத்தினார்கள். கோயில்த் திருவிழா, நல்லது கெட்டதிற்கான தூரப்பயணம் என அனைத்திற்கும் மாட்டுவண்டில்கள்தான். வரிசை கட்டி நிரலாகச் செல்லும் மாட்டு வண்டில்கள் கிராமத்து வீதிகளில்; புழுதி கிளப்பிக் கொண்டு போகும். நான் முந்தி நீ முந்தி என்று சவாரி போவதுதான் மாட்டு வண்டில் சவாரிக்கான போட்டிக்கு அடித்தளமாக அமைந்தது.


ஆரம்பத்தில் சவாரிக்கென விசேடமாக காளை வளர்ப்பதோ, சவாரிக்கென்றே உருவாக்கப்பட்ட கிராதி வண்டில்களோ இருக்கவில்லை. பின்னாளில் சவாரி பிரபல்யமடைந்ததும்தான் அந்த நிலை உருவானது. விவசாய வேலைகளுக்குப் பயன்படுத்தப்படும் எட்டரைச் சுற்று வண்டிலே ஆரம்பத்தில் சவாரிக்குப் பயன்படுத்தப்பட்டது. சவாரியின் போது வண்டிலில் நான்குபேர் அமர்ந்திருப்பார்கள். சாரதி வண்டிலின் போக்கை தீர்மானிக்க, சாரதிக்கு இரண்டு பக்கமும் அமர்ந்திருப்பவர்கள் மாட்டின் வேகத்தைத் தீர்மானிக்க, பின்னால் இருப்பவர் வண்டிலின் பாரச்சுமையின் சமாந்திரத்திற்காக அமர்ந்திருப்பார்கள். ஆரம்பகாலங்களில் இப்படித்தான் சவாரி நடந்தது.

பின்னர் சவாரியை ஒழுங்குபடுத்தியபோது, சனிக்கிழமைகளில் நடத்துவதற்கு தீர்மானித்தார்கள். கிராமங்களுக்கு ஏற்ற வகையில் தெருக்கள் தெரிவு செய்யப்பட்டு சவாரிகள் நடைபெற்றன. பெரும்பாலான வீதிகள் கற்தெருக்களாக இருந்ததால் தெருவழிச் சவாரி நடத்துவோருக்கு சாதகமாக அமைந்தது. யாழ்ப்பாணம் மருதனாமடச்சந்தியில் இருந்து ரயில் பாதை வரை, வேம்பிராயில் கனகம்புளியடியால் புத்தூருக்குச் செல்லும் தெரு, நாய்க்குட்டி வாய்க்கால் ஆகிய இடங்களில் சவாரி நடந்தது.

இந்த மூன்று தெருக்களிலும் அந்தக் காலத்தில் தொடர்ந்து சவாரிப்போட்டிகள் நடைபெற்று பிரசித்தி பெற்ற இடமாகக் காணப்பட்டன. பின்னர் அளவெட்டி கிராயிட்டித் தெரு, பிராமத்தைத் தெரு போன்ற இடங்களிலும் சவாரிகள் நடைபெற்றன. என்றாலும் அவை பெரும் பிரசித்தி பெறவில்லை.

இந்த சவாரிகளில் வண்டில்கள் முன்னுக்குப் பின் நின்று இரண்டு வண்டில்களுக்கு இடையிலான சவாரியாகவே இருந்தன. அன்றைய தெருக்கள் எல்லாம் கற்தெருக்கள் என்பதால், அடிக்கடி வண்டில்கள் செல்லும் போது வண்டில்த் தடம் உருவாகிவிடும். இப்படியான வண்டில் தடத்தில் இரண்டு வண்டில்கள் நேராகப் பின்னால் நிற்க வேண்டும். சிறிது வலப் பக்கம் சரிந்துவிட்டால் முன் வண்டில்காரர் தன் காளைகளை செலுத்த ஆரம்பித்து விடுவார்.

இந்த சவாரியில் இன்னுமொரு ஒழுக்கவிதியும் உள்ளது. பின்னால் நிற்கும் காளைகள் முன்னால் செல்லும் வண்டிலில் ஒரு பக்கம் விலகி, மற்றவண்டிலை மறிக்க இயலாது. அதாவது பின் வண்டில் முன் வண்டிலை முந்தும் நிலையில், முன் வண்டில்காரர் தனது வண்டிலை நிறுத்திவிட்டால் பின்



**சவாரிக்கு காளைகள் மன்னாரில் இருந்தே கொண்டு வரப்பட்டன. மன்னார்க் காளைகளும், நாட்டு காளைகளுமே இறுதிவரை சவாரியில் ஈடுபடும் என்பது சவாரிக்காரர்களின் பலமான நம்பிக்கை.**

வண்டில்க் காரருக்கே வெற்றி உரித்தாகிவிடும். பின் வண்டில்க் காரர் தன்னால் இயலாதவிடத்து தன் வண்டிலை பாதையில் இறக்கினால் முன்வண்டில்காரர் தனது வண்டிலை நிறுத்திவிடலாம். அவ்வாறு நிறுத்தினாலும் முன் வண்டில்காரருக்கே வெற்றி உரித்தாகும். சில வேளைகளில் பின் வண்டில்காரர் முன் செல்லும் வண்டிலை விலத்தி அதனை மறிப்பதும் உண்டு.

யாழில் 1952 ஆம் ஆண்டு அச்செழுவில் முதலாவது சவா்ரி நடந்தது. அதற்குப் பிறகுதான் ஞாயிற்றுக்கிழமைகளில் சவாரி ஆரம்பித்தது. அப்பொழுது எ பிரிவு காளைகள் மட்டுமே கலந்து கொண்டன. அந்த சவாரியை யாழ் மாவட்ட அப்போதைய அரசாங்க அதிபர் கற்சன் கொடியசைத்து ஆரம்பித்தார்.

அதில் யாழ்ப்பாணத்தின் பிரபல்யமான இரண்டு காளைச் சோடிகளான அளவெட்டி விசர்ச்சுட்டியன் பெரியமாவெள்ளைச் சோடிகளும், பிராமத்தை கள்ளக் கருப்பும் குடும்பி மாவெள்ளைச் சோடிகளும் கலந்து கொண்டன. அதில்விசர்ச்சுட்டியன் பெரியமாவெள்ளைச் சோடிகள் வெற்றிபெற்றன. வெற்றி பெற்ற காளைகளுக்கு சலன்ஜ் கப் வழங்குவது அப்போதுதான் அறிமுகப்படுத்தப்பட்டது.

பின்நாளில் கல்வீதிகள் மாறி தார் வீதிகள் வந்தபோது, முற்றவெளி சவாரித்திடலிற்கு போட்டிகள் இடம்மாறின. போட்டிகள் நடக்குமிடத்தை விடந்தை என கூறுவார்கள். அதனை முற்றவெளி விடந்தை என அழைத்தார்கள். றீகல் தியேட்டரடியில் இருந்து அப்போதைய பொலிஸ் நிலையப் பக்கமாக சவாரி நடந்தது. துரையப்பா ஸ்ரேடியம் கட்டப்படும் வரையில் அங்கேதான் பிரபல்யமான சவாரிகள் நடைபெற்றன. துரையப்பா ஸ்ரேடியம் கட்டப்பட்ட பின்னர், வேறு விடந்தைகள் உருவாகின.

அப்போதை சவாரிகள்; ஒரு தாக்குமுறையில் (ஒரே தடவையில் வெற்றியாளரை தீர்மானிக்கும் முறை) நடந்தன. பின் நாட்களில்த்தான் மூன்று தாக்கு (மூன்று தடவைகளாக போட்டி நடந்து வெற்றியாளரை தீர்மானிக்கும் முறை) முறை அறிமுகமானது.

அப்போதைய சவாரிக்கு காளைகள் மன்னாரில் இருந்தே கொண்டு வரப்பட்டன. மன்னார்க் காளைகளும், நாட்டு காளைகளுமே இறுதிவரை சவாரியில் ஈடுபடும் என்பது சவாரிக்காரர்களின் பலமான நம்பிக்கை. மன்னாரில் திருக்கேதீஸ்வரத்திற்கு முன்னால் உள்ள பெரிய நாவற்குளத்துக் காளைகள், பழங்கோட்டைக் காளைகள் மற்றும் தலைமன்னார்க் காளைகள் அதிகமாக சவாரியில் ஈடுபட்டன. காளைகள் ஓடுவதற்கான விடந்தை 375 யார் நீளமுடையது. ஆனால் நீர்வேலி விடந்தை 400 யார் நீளமுடையது. அந்த விடந்தையில்த்தான் காளைகள் கற்றவித்தையை மொத்தமாக காட்டுமென நம்பினார்கள்.

பின்னாட்களில் எ பிரிவுடன் பி பிரிவும் ஆரம்பிக்கப்பட்டது. நலம் போடப்பட்ட காளைகள் எ பிரிவிலும், நலம் போடப்படாத காளைகள் பி பிரிவிலும் வகைப்படுத்தப்பட்டன. இந்தகால சவாரியில் ஒரு தடவையில் நான்கு சோடிக் காளைகள் களமிறங்கின. ஏழெட்டு வருடங்களுக்குப் பின் சி பிரிவு என்னும் பிரிவும் உருவாக்கப்பட்டது. அப் பிரிவு உருவாக்கப்பட்டதன் பின் எ பிரிவிலும், பி பிரிவிலும் நலம் போடப்பட்ட காளைகள் ஓடின. சி பிரிவில் நலம்போடாத காளைகள் ஓடின. நீண்ட காலத்திற்குப் பின் டி பிரிவு உருவாக்கப்பட்டது. இப் பிரிவில் இரண்டு பற்கள் உடைத்த காளைகளும், பற்கள் உடைக்காத காளைக் கன்றுகளும் பங்குபெற்றன. (பற்களைக்கொண்டே காளைகளின் வயது தீர்மானிக்கப்படுகின்றது. அண்ணளவாக ஒன்றரை தொடக்கம் மூன்றுவயது வரையில் இரண்டு பற்களை உடைக்கும்)

ஆரம்பத்தில் நான்கு பேர் சவாரி வண்டிலில் இருந்தார்கள். இதுபின்னர் மூன்று பேராகி, இரண்டு பேராகியது. ஒருவர் விடுகைக்காரர், மற்றையவர் ஏவல்காரர். பின்னாளில் ஒருவர் மட்டும் சவாரிவிடும் வழக்கமும் உருவானது.








வவுனியா தெற்கு தமிழ்பிரதேசசபைக்கு உட்பட்ட வவுனியா பெரியகோமரசன்குளம் வீதியின் இன்றைய நிலையிது. நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் உள்ள வீதி மக்கள் பாவனைக்கு உகந்ததாக இல்லாமலுள்ளது. ஆனால் அதிகாரிகளின் பார்வைதான் இன்னும் வீதியின் மீது திரும்பவில்லை.

வவுனியாவின் பிரபல்ய பாடசாலைகளில் ஒன்றான பெரியகோமரசன்குளம் மகா வித்தியாலயம், கல்வாரி திருத்தலம் மற்றும் வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபையால் பராமரிக்கப்பட்டுவரும் பொழுதுபோக்கு பூங்கா என்பவற்றிற்கு செல்வதற்கு இந்த வீதியைத்தான் பாவிக்க வேண்டும்.

எனினும், நீண்டகாலமாக வீதி புனரமைக்கப்படாமல் உள்ளது. வீதியை புனரமைத்து தருமாறு அதிகாரிகள், அரசியல்வாதிகளிடம் மக்கள் பலதடவைகள் கோரிக்கை வைத்தும், பலன் கிட்டவில்லை.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபையினரே, பாராளுமன்ற உறுப்பினர்களே, மாகாணசபை உறுப்பினர்களேஞ் இது உங்களின் கவனத்திற்கு !

---

மட்டக்களப்பின் கோரளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலகபிரிவிற்குட்பட்ட புணானை கிழக்கில் அத்துமீறிய காணி சுவீகரிப்பு நடப்பதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். அரசகாணிகளை சில தனிநபர்கள் ஆக்கிரமித்து வருகின்றனர்.மட்டக்களப்பு கொழும்பு பிரதானவீதியில் உள்ள புணானை கிழக்கு கிராமஉத்தியோகத்தர் பிரிவிற்குட்பட்ட பகுதிலேயே இந்த சட்டவிரோத நிலஆக்கிரமிப்பு நடப்பதாக மக்கள் குற்றம்சுமத்துகிறார்கள்.

சில முஸ்லீம் நபர்கள் 20 ஏக்கருக்கும் அதிகமான அரசகாடுகளை அழித்து, நிலச்சுவீகரிப்பில் ஈடுபட்டுள்ளதாக குற்றம்சுமத்தப்பட்டுள்ளது. காணிசுவீகரிப்பில் ஈடுபடுபவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தை சேர்ந்த பிரதியமைச்சர் ஒருவரின் உறவினர்கள் என்றும் மக்கள் குற்றம்சுமத்துகின்றனர்.

இந்த விடயத்தை அதிகாரிகள், அரசியல்வாதிகளின் கவனத்திற்கு கொண்டு சென்றும், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென மக்கள் குற்றம்சுமத்துகிறார்கள்.மிகஅண்மையில்த்தான் அரச வர்த்தமானி அறிவித்தலில், இந்த பிரதேசம் வனபரிபாலன திணைக்களத்தின் ஆளுகைக்குட்பட்டது என அறிவிக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. இயற்கையை அழிப்பதால் மனிதன் கொடுத்துவரும் விலைகள் போதும். உரிய அதிகாரிகளே உங்கள் கடமையை செய்யுங்கள் !

















# டூரிங் டாக்கீஸ்

## அனிருத்திற்கு அடுத்தடுத்த அடி

'பீப்' பையன் அனிருத்திற்கு இது போதாத காலம். அந்த கண்றாவி பாடல் வந்ததை தொடர்ந்து புதிய பல படங்களிலிருந்து அவரை தூக்கியுள்ளனர். காது கொடுத்து கேட்க முடியாத அந்த கண்றாவி பாடலுடன் அவர் தொடர்புபட்டதை தொடர்ந்து, 'அந்த பையனை ஒன்றுக்கும் சேர்க்க கூடாது' என ரஜினியும் தனது மகள்களிற்கு கட்டுப்பாடு போட்டார். இப்பொழுது சூர்யாவின் சிங்கம் 3 படத்திலிருந்தும் தூக்கப்பட்டுள்ளார். அவருக்கு பதிலாக ஹரிஸ் ஜெயராஜ் ஒப்பந்தமாகியுள்ளார்.

## கவர்ச்சியை கைவிடும் காஜல்

நடிகைகள் பீல்ட்டில் நிலைக்க தூக்கும் ஆயுதம் கவர்ச்சி. லிப் டு லிப், ரூ பீஸ் என எந்த லெவலுக்கும் இறங்கிப் போக பல நடிகைகள் தயாராக உள்ளனர். இந்தப்போட்டிக்குள் குதித்த காஜலும் ஆனமட்டும் காட்டு காட்டென கவர்ச்சி காட்டினார். எப்பொழுதும் ஒரே மாதிரி நடிக்க முடியாதல்லவா. அதை உணர்ந்துவிட்டார் காஜல். 'கவர்ச்சியாகவும், சுட்டிப்பெண்ணாகவும் பல பாத்திரங்களில் நடித்து விட்டேன். இப்பொழுது ஒரு எல்லையை அடைந்து விட்டேன். இனியும் அப்படி நடித்துக் கொண்டிருக்க முடியாது. அதனால் நல்ல வேடங்களை மட்டும் தேர்வு செய்து நடிக்கவுள்ளேன்' என்றுள்ளார்.



## உடல் எடையை குறைத்தார் திரிஷா

திரிஷா இப்போது, 'நாயகி' என்ற திகில் படத்தில் நடித்து வருகிறார். இதில், அவருக்கு 2 வேடங்கள். அதில், 20 வயது கல்லூரி மாணவி வேடமும் ஒன்று. மாணவியாக நடிப்பதற்காக, திரிஷா தனது உடல் எடையை குறைக்கும் முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறார். இதுவரை அவர் 4 கிலோ எடை குறைத்து இருக்கிறார். திரிஷா, 30 வயதை கடந்து விட்டார். என்றாலும் அவர் ஒல்லியாக இருப்பதால் இளமையாகவே காணப்படுகிறார். அவர் மேலும் மெலிந்து இருப்பதால் இளமையும், அழகும் கூடியிருப்பதாக, 'நாயகி' படக்குழுவினர் கூறுகிறார்கள்.



## மயக்கும் மனிஷா

மனிஷா யாதவ் இப்பொழுது பஷன் டிசைனிங் துறையில் குதித்துள்ளார். பெங்களூரில் 'மனிஷா சுரேஷ் டிசைன் ஸ்ரூடியோ' என்ற அவரது நிறுவத்தை திறந்துள்ளார். சினிமாவிற்கு அடுத்து பஷன் டிசைனிங்கில்த் தான் தனது முழு கவனமும் என்கிறார் மனிஷா. இந்தியாவின் பெரிய பஷன் டிசைனர்களை போல கோடிக்கணக்கில் பெறுமதியான உடைகளை வடிவமைக்கவில்லையாம். மேல்மத்தியதர வர்க்கத்தினருக்கு பொருத்தமான வடிவங்களை, கைக்கடக்கமான விலையில் தயாரிக்கிறேன் என்கிறார். என்னதான் பஷன் துறையில் குதித்தாலும், சினிமாவிற்கு அடுத்ததுதான் அது என கூறி, நெஞ்சை நிம்மதியடைய வைத்திருக்கிறார்.



## இளம்பெண்கள்தான் தேவையா?

கொதித்துப் போயிருக்கிறார் அனுஷ்கா சர்மா. சினிமாவில் பெண்களை பாலியல் பண்டமாக பாவிக்கிறார்கள் என்பதுதான் கொதிப்பின் காரணம். ‘சினிமாவில் பெண்கள் அழகாக இருக்க வேண்டும், நாயகனை ஈர்க்க கூடிய விதமாக தேவதையைப் போல கவர்ச்சியாக இருக்க வேண்டுமென எதிர்பார்க்கிறார்கள். நாயகர்கள் மட்டும் தங்கள் வயதையும் கடந்து ஹீரோவாக நடித்துக் கொண்டிருக்கிறார்கள். நாயகி மட்டும் இளம்பெண்ணாக இருக்க வேண்டுமென எதிர்பார்ப்பது என்ன நியாயம்? இதில் பாலியல் சார்ந்த பார்வை உள்ளது. நடிகைகள் தங்கள் அங்கங்களை காட்டுவது, அழகாக நடனமாடுவதை தவிர அவர்களிற்கு சினிமாவில் வேறென்ன வேலையிருக்கிறது?’ என கொதித்துள்ளார்.

## பாவனாவிடம் பறித்த நடிகர்

மலையாள முன்னணி நடிகர் திலீப் பற்றிய திடுக் புகாரளித்துள்ளார் பாவனா. தனது படவாய்ப்புக்கள் குறைய அவர்தான் காரணமென்றுள்ளார். நடிகை மஞ்சு வாரியார் திருமணம் செய்தது திலீப்பை. பின்னர் இருவருக்கும் ‘லடாய்’ ஆகி பிரிந்தனர். அந்த சமயத்தில் மஞ்சுவாரியாருக்கு நிறைய உதவியாக இருந்திருக்கிறார் பாவனா. இதனால் படவாய்ப்புக்களை தனது செல்வாக்கை பாவித்து குறைத்துள்ளார் திலீப் என்பது பாவனாவின் குற்றச்சாட்டு.

## கிளைமாக்ஸ் காட்சிக்காக விஜய் எடுத்த ரிஸ்க்

விஜய் தற்போது அட்லி இயக்கத்தில் ‘தெறி’ படத்தில் நடித்து வருகிறார். தற்போது இப்படத்தின் கிளைமாக்ஸ் சண்டைக்காட்சியின் படப்பிடிப்பு சென்னை ஒமேகா தொழிற்சாலையில் நடைபெற்று வருகிறது. இதில் விஜய்யுடன் 50க்கும் மேற்பட்ட வெளிநாட்டு சண்டை கலைஞர்கள் பங்கேற்று வருகின்றனர். இந்த சண்டைக் காட்சியில் விஜய் கிரேனில் தொங்கியபடி சண்டை போடும் காட்சியை படமாக்கி இருக்கிறார்களாம். இந்த காட்சியை விஜய் எந்த வித தயக்கமும் இல்லாமல், டூப் போடாமல் செய்தாராம். இந்த சண்டைக்காட்சியை கிரேன், ஜிம்மி ஜிப்பி போன்ற கருவிகளை பயன்படுத்தி 6 கேமராக்களைக் கொண்டு பல கோணங்களில் படமாக்கி இருக்கிறார்களாம்.



வைத்தியர் கந்தையா சோதிதாசன்
drsothithas@gmail.com
0776284687




**ந.ராசசேகரன் (38 )**
**கலட்டி அம்மன் வீதி**

**கேள்வி:** எனக்கு தினமும் மதிய உணவிற்கு பின் தூக்கம் வந்து விடுகிறது. அதனால் அலுவலகத்தில், பின்னேர வேலையை சரிவர செய்ய முடியவில்லை. இது உடல் நலக்குறைவின் அறிகுறியா?

**பதில்:** அனேகருக்கு மதிய உணவின் பின் தூக்கம் வருவது சாதரணமானது தான். ஆனால் வேலைசெய்ய முடியாத அளவிற்கு சோர்வு ஏற்பட்டால் கவனிக்க வேண்டும். காலையில் சாப்பிடாது வேலைக்குசென்றால் மதியம் அதிகம் சாப்பிடும்போது ஓமோன்கள் அதிகம் சுரப்பதால் சோர்வு ஏற்படும்.

மதிய உணவில் மாப்பொருள் மட்டும் இருக்கிற சோறு அதிகம் சாப்பிடாலும் தூக்கம் வரலாம். இதை தவிர்க்க விற்றமின், புரதம், கனிப்பொருட்கள் அடங்கிய சத்துள்ள சமச்சீர் உணவை சாப்பிட வேண்டும்.

அதிக உடற்பருமன், நீரிழிவு போன்ற நோய்கள் இருந்தாலும் பகலில் தூக்கம் வர வாய்ப் புண்டு. எனவே இதற்கான பரிசோதனைகளை செய்து கொள்ளுங்கள்.

வல்லாரை பாணி, திராட் சாரிஸ்டம் என்பன சோர்வு நீங்க உதவும் மருந்துகள். பாவித்து பலன் பெறலாம்.

**யேசுதாசன் ( 40 )**
**கோப்பாய்**


**கேள்வி :** எனக்கு காலையில் எழுந்தவுடன் தலைச்சுற்று ஏற்படுகிறது.

இரத்த அழுத்தம் இருக்குமோ என பயப்பிடுகிறேன். இரத்த அழுத்தத்தின் அறிகுறிகள் யாவை?

**பதில்:** கண்பார்வை குறைபாடு. காதுநோய்கள். கொலஸ்ரோல் அதிகரிப்பு. நீரிழிவு போன்ற பல காரணங்களால் தலைச்சுற்று ஏற்படுகிறது. எனவே நீங்கள் அதற்கான மருத்துவ பரிசோதனைகளை செய்து எதனால் தலைச்சுற்று ஏற்படுகிறதென்று முதலில் உறுதிப்படுத்தி கொள்ளவெண்டும்.

இரத்தஅழுத்தத்தின் அறிகுறிகள் பற்றி கேட்டிருந்தீர்கள். இரத்த அழுகத்தமானியில் அளக்கும்போது வளந்தவர்களில் 130/90 ற்கு மேற்படின் இந்நிலையை அதி இரத்த அழுத்தம் என குறிப்பிட முடியும்.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இந்நோய்க்கு ஆரம்ப அறிகுறிகள் காணப்படுவதில்லை. சில சமயங்களில் தலைச்சுற்று, தலைவலி, கண்ணை மின்னுதல் முதலியன இருக்கலாம்.



**நிர்மலா (30)**
**அரியாலை**

**கேள்வி :** பனிக்காலம் ஆரம்பிக்கிறபோது எனக்கு ஆஸ்துமா வருகிறது. நோய் தணிய உதவும் ஆயுர்வேத மருந்துகளை குறிப்பிடுவீர்களா?

**பதில்:** பெரும்பாலும் ஒவ்வாமையினால் தான் ஆஸ்துமா ஏற்படுகிறது. உங்களுக்கு பனிக்காலம் ஒத்துவரவில்லை என குறிப்பிட்டுள்ளீர்கள்.

ஆயுர்வேதத்தில் சுவாசப் பைகளை பலப்படுத்தவும்,இரைப்பிருமலில் இருந்து விடுபடவும் பல மருந்துகள் சிபார்சுசெய்யப் படுகின்றன. தாளிசாதி சூரணம், கனகாசவம், சுவாசகுடோரி, கண்டங்கத்தரி லேகியம், பினிசத் தைலம் .போன்ற மருந்துகள் பயனளிக்கின்றன. வைத்தியரின் ஆலோசனையுடன் பாவிக்கவும். மேலும் கிரந்தி வகையான உணவு பொருட்கள் இறால், கணவாய், கத்தரிகாய் போன்றவற்றை தவிர்த்துக் கொள்ளவும் . குளிரூட்டியில் வைத்த உணவுகள், எண்ணெயில் பொரித்த உணவுகளையும் தவிர்ப்பது நன்மை தரும்.

**எஸ். கோபிநாத் ( 27)**
**கச்சேரியடி, யாழ்ப்பாணம்.**

**கேள்வி :** தற்போது யாழ்ப்பாணத்தில் டெங்கு நோய்த்தாக்கம் அதிகமாக இருப்பதாக பத்திரிகைளிலிருந்து அறிகிறோம்.மழைக்காலத்தில் வருகின்ற சாதரண வைரஸ் காச்சலில்இருந்தடெங்குவைஎப்படி வேறுபடுத்தி அறியலாம்? இதற்கான விசேட அறிகுறிகள் என்ன? சித்த மருத்தவத்தில் தீர்வுண்டா?

**பதில்:** டெங்கு நோயும் வைரஸ் மூலமே பரவுகிறது. எடிஸ் எனப்படும் ஒருவகை நுளம்பினால் இந்நோய் பரவுகிறது.

திடீரென ஏற்பட்ட கடுமையான காய்ச்சல், தாங்க முடியாத தலைவலி முக்கியமாக முன்தலைப் பக்கத்தில், கண்களின் பின் புறத்தில் வலி, கண்களை உருட்டும் போது கடுமையான வலி, உடல்வலி, மூட்டுக்கள், தசைகள், கை, கால், எலும்பு போன்றவற்றில் வலி, குமட்டல், வாந்தி, சிறிய சிவந்த புள்ளிகளைக் கொண்ட தழும்புகள், கண் சிவத்தல், உடல் சோர்ந்து வெளிறிக்காணப்படல்,பசியின்மை, வெளிச்சத்திற்குப் பயம்,திடீரெனக் காய்ச்சல் குறைதல், குருதிச் சிறுதட்டுகளின் எண்ணிக்கை குறைதல் போன்றவை ஆரம்ப நிலை டெங்குக் காய்ச்சலின் அறிகுறிகளாகும்.

நிலவேம்பு கசாயம் சிறப்பாக தரப்படுகிறது. சீதாராமவடி, இராமபாணம் போன்ற மருந்துகள் பலனளிக்கின்றன.

நிலவேம்பு கசாயம்

சுக்கு கடுக்காய் நிலவேம்பு தோலும்


ஆடாதொடை சீந்தி கைக்கும் புடலம் பொடியதுவும் கதிக்கும் இதுவொன்றோர் களஞ்சி ஒக்க நறுக்கி

இருநாழி உழக்காய் காய்ச்சி உண்பீராய்

தக்க விஷமிச் சுரமதுவும் தான் விட்டோடும் தப்பாதே !

என்பது மருத்துவப் பாடல். அதாவது சுக்கு, கடுக்காய் தோல், நிலவேம்பு மற்றும் ஆடாதோடை, சீந்தில் , பேய்புடொல் இது அத்தனையையும் பொடியாக்கி 5 கிராம் அளவு எடுத்து 1 டம்ளர் நீர் ஊற்றி நன்றாக கொதிக்க வைத்து 1/4 டம்ளராக நீர் வந்ததும் இறக்கி வைத்து இந்த நீரை குடிக்க வேண்டும்.





**ந.குமணன் ( 25)**
**அரியாலை.**

**கேள்வி:** என் உடல் எப்போதும் சூடாகவே இருக்கிறது. இரவில் இன்னும் அதிகமாக இருக்கும். மிகவும் மெலிவாக இருக்கிறேன். இரத்தபரிசோதனை செய்ததில் எந்த குறைபாடும் இல்லை என்கிறார்கள். உடல் சூட்டைக் குறைக்க என்ன செய்யலாம்?

**பதில்:** பித்த தேகிகளுக்கு பொதுவாகவே உடல் சூடாக இருக்கும்.இதை சித்த மருத்துவத்தில் கணைச்சசூடு என்பார்கள் .

சாத்தாவாரி கிருதம், யவனப் பிகாசலேகிகியம் என்பவற்றை வைத்திய ஆலோசனையுடன் பாவிக்கலாம். பிருங்கா மலத்தைலமும் பலன்தரும். மேலும் நல்லெண்ணெய் 15 நாட்களுக்கு ஒருமுறை தலையில் தேய்த்து வெந்நீரில் குளித்து வரக் கண்கள் குளிர்ச்சியடையும். தலைப்பாரம், உடற்சூடு ஆகியன குறையும்.

**ஏ .தேவகுமார் ( 57)**
**ஈச்சமோட்டை**

**கேள்வி:** எனக்கு உணவு சரிவர ஜீரணம் ஆவதில்லை. சாப்பிட்ட உணவு மேல் கிளம்பி விடுதல், ஏப்பமாக வருதல், வாயு கலைதல், நெஞ்சு எரிச்சல் போன்ற பல்வேறு தொந்தரவுகள் ஏற்படுகிறது. என்ன செய்யலாம் ?

**பதில் :** உங்களுக்கு வயிற்றுப்புண் இருக்கிறதென நினைகிறேன். உணவு விடயத்தில் பத்தியம் தேவை. இறைச்சி வகைகள்,முட்டை,கிழங்கு வகைகள் குறிப்பாக உருளைக் கிழங்கு, வள்ளிக்கிழங்கு, சிவப்பு முள்ளங்கி அதிக இனிப்பு வகைகள், பல்வேறு வகையான கொழுப்பு உணவுகள் என்பவற்றைவற்றைத் தவிர்ப்பது நல்லது.

மேலும் அதிக சூடான ஆகாரம் அல்லது திரவ உணவான கோப்பி, ரீ போன்றவற்றையும் தவிர்க்க வேண்டும். மது பானங்கள் அருந்துவதை உடனடியாக நிறுத்த வேண்டும். அபிபத்திரசூரணம், அதிமதுரப்பாணி போன்ற மருந்துகள் பாவிப்பதால் நிவாரணம் பெறலாம்.





# தென்னையில் வெலிகம ஓலை வாடல், ஓலை நிறமாற்ற நோயும், கட்டுப்பாடும்

## (Weligama wilt disease)



ஜே.சத்தியேந்திரன்
தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர், கிளிநொச்சி
0775056263

இலங்கையின் மாத்தறை மாவட்டத்தில் தென்னோலை அழுகல் நோய் (Leaf mot disease) அல்லது வெலிகம வாடல் முதன் முதலில் 1999ஆம் ஆண்டு தென்னைகளுக்கு தொற்றியதாக தென்னை ஆராய்ச்சி நிலையத்தினருக்கு அறிக்கை செய்யப்பட்டது.

மூன்று வருட தென்னைகளிலிருந்து முதிர்ந்த தென்னை மரங்கள் வரைக்கும் இந்நோய் தாக்கும். அத்துடன் இந்நோய் காணப்படும் பிரதேசங்களில் வேறொரு புதிய நோயான (Leat yellowing syndrome) உம் விரைவாகப் பரவி வருகின்றது. இந் நோய் மாத்தறை, வெலிகம தொடக்கம் திக்வெல்ல, அக்குரஸ்ஸ பிரதேசங்களிலும், காலி மாவட்டத்தின் பேருதுவ உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிற்கும் ஏற்கனவே பரவியுள்ளது. பல வகையான பங்கசுக்கள் குருத்துப் பகுதியைத் தாக்குவதனால் இந் நோய் உண்டாவதாக நிருபிக்கப் பட்டுள்ளது.

### அறிகுறிகள்

- குருத்து ஓலைகள் அழுகி, பின்பு விரியும் போது அவை காய்ந்து கறுப்பு நிறமாகி உதிர்ந்து விடும்.
- நோயின் தாக்கம் கூடுதலாகும் போது தென்னையின் வட்டு படிப்படியாகச் சிறுத்து பூத்தலும், காய்த்தலும் குறைவடைந்து இறுதியில் மரம் இறந்து விடும்.
- இந்நோயின் முழுக்காலம் 35 வருடங்களாகும்.
- இதன் உக்கிரத் தன்மை மழைக் காலத்தில் கூடியும், கோடை காலத்தில் குறைவடைந்தும் காணப்படும்.
- சில நேரங்களில் பங்கசு ஆனது கபில நிறப் புள்ளிகளைத் தோற்றிவிக்கும்.
- தென்னையின் தோற்றம் விகாரமானதாகக் காணப்படும்.
- தொற்று ஏற்பட்ட தென்னோலைகளில் "செரஸ்ரோசிஸ்ரிஸ் பரடொக்கா" காணப்படும்.

### நோய்களில் கட்டுப்படுத்தலும் முகாமைத்துவம் செய்தலும்.

- தென்னோலை விரியும் வரை இந் நோய் இருப்பதாகத் தெரியாது. விரிந்ததன் பின்பு தான் இந்நோயினை அடையாளம் காணலாம்.
- பங்கசுக் கொல்லிகளை வட்டுப் பகுதிக்குள் தெளிப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம். ஆனால் ஒரு தடவை விசிறினால் காணாது பல தடவைகள் விசிற வேண்டும்.

### சிபார்சு செய்யப்பட்ட பங்கசு நாசினிகள்

- Folicur-Ew250 (Tebuconazole) 4 மில்லி லீற்றரினை ஒரு லீற்றர் தண்ணீருடன் கலந்து விசிறவும்.
- Contaf-5Ec (hexaconazole)-10 மில்லி லீற்றரினை ஒரு லீற்றர் தண்ணீருடன் கலந்து விசிறலாம்.
- தாக்கப்பட்டு சேதமடைந்த குருத்துப்பகுதிகளை அகற்றி விட்டு, வட்டுப்பகுதிக்கு 12 மாதஇடைவெளியில் மேற்கூறியவற்றில் ஒரு பங்கசு நாசினியைத் தெளிக்கவும்.
- சேதமடைந்த பகுதிகளை ஓரிடத்தில் போட்டு எரிக்கவும்.
- வடிகான் அமைப்புக்களையும், முறையான உரப்பிரயோகத்தினையும் மேற்கொண்டால் விரைவாகத் தொற்றலைத் தடுக்க முடியும்.

### தென்னோலை மஞ்சளாகும் நோய் பரவுதல்.

- மாத்தறை பிரதேசத்தில் காணப்படும் தென்னோலை அழுகல் நோயுடன் தென்னோலை மஞ்சளாகும் நோயும் சேர்ந்து பரவி வருகின்றது. இவ் நிறமாற்றம் மெல்லிய மஞ்சள் நிறத்தில் இருந்து கடும் மஞ்சள் நிறம் வரையிலான பலவித நிறங்களில் தென்னோலை காணப்படும்.
- இறுதியில் ஓலையின் இரு பக்கங்களும் காய்ந்து காணப்படும். இந்நோய் போசனை மூலப்பொருட்களின் குறைபாடு அல்ல என்பது ஆராய்ச்சி மூலம் தெரியவந்துள்ளது.
- இந்த இரு நோய்களின் தாக்கத்தினாலும் விளைச்சல் குறைவடையும் எனவே வேறு இடங்களுக்கு பரவுதலை தடுத்தல் வேண்டும்.
- கட்டுப்பாட்டு முறையாக இப் பிரதேசங்களில் இருந்து தென்னம்பிள்ளைகளையோ அல்லது "பாமே" குடும்பத்தினரைச் சார்ந்த ஏனைய மரங்களையோ ஏனைய பிரதேசங்களுக்கு எடுத்துச்செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.
- வெலிகம தென்னோலை வாடல் நோய்க் காவிகள் மூலம் பரவுவதாகவும் தென்னை ஆராய்ச்சி நிலையத்தினர் தெரிவித்துள்ளனர்.







2016 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய கல்விச்சீர்திருத்தம் தொடர்பாக தரம் 1 ஆசிரியர்களிற்கான செயலமர்வு அண்மையில் நடந்தது.



# எண் சோதிடம் அதிர்ஷ்ட விஞ்ஞானம் தரும் வாழ்வு முன்னேற்றங்கள்

சோதிட ஆலோசகர்
சி.இராசநாயகம்
0776147392

### எண்:07(கேது)

இந்த ஏழு எண் கூடுதலாய் மதாபிமானிகள் ஆன்மீகத் துறைகளில் உழைப்பவர்களைப் பற்றி விபரிக்கும். தீவிரமான மத நாட்டம், கொள்கைப் பிடிப்பு, அளவுக்கதிக சாஸ்திரங்கள் என்பவை ஏழு எண் கொண்டவர்களிடம் இருக்கும். யோகம் கூறுபவை, மந்திரங்கள் கூறுபவை போன்ற விவகாரங்களில் தீவிர நாட்டம் கொண்டிருப்பார். இவர்களில் ஒரு சிலர்மாத்திரம் துறவிகளாகக் காணப்படுவார். 7,16,25 திகதிகளில் பிறப்பவர்கள் எல்லோரும் இந்த எண்ணின் ஆதிக்கத்திற்கு உட்பட்டோராவர். மனதிற்குஎட்டாததையும்தெய்வீகத் தன்மை பொருந்தியவற்றையும் முன்னோர்கள் ஏழு பிரிவுகளாக வகுத்துள்ளதை நாம் அறிந்திருப்போம். வாரம் ஏழு நாட்கள் கொண்டுள்ளதனையும், சங்கீதம் ஸப்த ஸ்வரங்கள் கொண்டுள்ளதையும் மற்றும் ஸப்த ரிசிகள், ஸப்த ராகங்கள், ஸப்த கன்னிகைகள், ஸப்த லோகங்கள், ஸப்த நாடிகள் என்பன இவ்வாறு வகுக்கப்பட்டவை ஆகும்.

### பொதுவான குணாம்சங்கள்.

சுத்தமான ஆடை அணிதல், சிறிதளவாவது அலங்காரம் கொண்டிருத்தல், வசீகரமான உடல் கட்டமைப்பு, நல்ல உயரமான தோற்றம் என்பன காணப்படும். பார்த்தால் கண்ணியமானவர்என அறியக்கூடியதாய் இருக்கும். தன்னம்பிக்கை கொண்டுவிட்டால் நல்ல வாயாடி போல் இருப்பார். எனவே இவர்களுடன் மற்றவர்கள் அபிப்பிராயபேதம் கொள்ளும் நிலை காணப்படும். பெரும்பாலானோர் முன்கோபக்காரர்களாகக் காணப்படுவார். தனித்த எண்ணம், திடீரெனக் கோபம் கொள்ளல், ஏகாந்தமான போக்கு என்பவையும் இவரிடம் காணப்படும். கஸ்டம், துக்கம் எல்லாவற்றையும் மனதிற்குள்ளேயே அடக்கிக் கொள்வார். இவர்களில் பெரும்பாலானோர். கலைகளில் நல்ல ஆர்வம் காட்டுவார். சிலர்நல்ல எழுத்தாற்றல் உள்ளோர்ஆகக் கணிக்கப்படுவார். இன்னும் சிலர் மூலிகைகள், மருந்துகள் மற்றும் இரசாயனம் சம்பந்தப்படும் ஆராய்ச்சிகளில் ஈடுபடுவார். சிலரிடம் நல்ல நாட்டுப்பற்று காணப்படும். இதனால் அரசியல் வாழ்விலும் ஈடுபாடு காட்டுவார்கள். மற்றவர்களை எதிர்த்து எதிர்வாதம் செய்வதில் வல்லவர்கள். இவர்களில் பலர் ஆணானால் மனதிற்கு இசைந்த மனைவியோ, பெண்ணானால் மனதிற்கு இசைந்த கணவனோ கிடைப்பதில்லை. அவ்வாறு குடும்பவாழ்வு நன்றாக அமைந்தாலும் குழந்தைப் பாக்கியம் இல்லாதிருக்கும் நிலையும் காணப்படும். மேலும் ஒரு சில பெண்களுக்கு அந்தஸ்திற்கு மேற்பட்ட கணவரும், ஒரு சில ஆண்களுக்கு அந்தஸ்திற்கு மேற்பட்ட மனைவியும் கிடைப்பதற்கு வாய்ப்புக்கள் கிடைக்கும். 7 எண்ணில் பிறந்தோர்பலரும் நல்ல உழைப்பாளிகளாகஇருப்பார். இவர்களுக்கு மனோபலம் அதிகமாய் இருக்கும்.

எதிர்காலம் பற்றிய கவலைகள் மனதில் இருந்து கொண்டே இருக்கும். பொதுமக்கள் ஆதரவில் பல கருமங்களில் ஈடுபட்டு வெற்றி காண்பார். எந்த தொழிலையும் சுதந்திரமாகச் செய்யவே விரும்புவார்கள். இவர்களை சுலபமாக மக்கள் பின்பற்றுவார்கள். இவர்களது வாழ்க்கை ஏனையோரை மிகவும் கவரும். எவ்வாறாயினும் இவர்களில் பலரும் அதிர்ஷ்டம் அற்றவர்களாகவே காணப்படுவார். நல்ல விவேகமான சிந்தனை உடைய இவர்கள் தங்களது சலியாத உழைப்பினால் மேன்மை பெறுகின்றனர். மிக இளம்பராயத்திலேயே சங்கீத வித்துவான்களாகவும், நடிகர்களாகவும், பெரும் மேதாவிகளாகவும் பிரகாசிப்பார். எவ்வாறாயினும் இவர்களது வாழ்க்கையில் ஒரு குறை இருந்து கொண்டே இருக்கும். எந்தவொரு கருமமும் சுமூகமாக நன்றாய் நிறைவுறக் கூடிய நிலையை எட்டியதும் சில எதிர்பாராத தாமதம், இடைஞ்சல், தடைநிலை கண்டு விடும். பிறந்த எண் கூட்டு எண் இரண்டும் பொருந்திக் காணப்பட்டால் வாழ்க்கையில் பெரும் முன்னேற்றம் வெற்றிகள் காண்பார்கள். ஒரு சிலருக்கு பின்வாங்கும் சுபாவமும் உண்டு. பெரிய கருமங்களை விடுத்து சிறிய கருமங்களில் ஈடுபடுவார். உன்னத நிலையில் இருந்து கீழிறங்குவார். சுயநலமின்றி பொதுவான பணிகளில் ஈடுபட்டு உழைத்தால் மகோன்னத வெற்றியும் பெரும் புகழும் நிலைத்துக் காணப்படும்.

### தேக அமைப்பு, நோய்.

உயரமானவர்களாகவும், அதற்கு ஏற்றாப்போல் நல்ல பொருந்தின முகமும் கொண்டிருப்பார். நல்ல பார்வையான மூக்கு நாடி புருவங்கள் அமைந்து காணப்படும். மிகச் சிலர்மாத்திரம் உயரம் குறைந்தவர்களாகக் காணப்படுவார். இவர்களது கூட்டு எண்களை அடுத்து இவர்களது அங்க இலட்சணங்கள் பொருந்திக் காணப்படும். மலச்சிக்கல், கைகால் உளைவு, வாதம், தோல் சம்பந்தப்படும் வியாதிகளும் இவர்களைப் பாதிக்கும். நல்ல உடற்பயிற்சி இவர்களுக்கு அவசியமாகும். உணவு வகைகளில் கீரைவகை, பழவகை, மற்றும் பூசணி, பரங்கி, வெள்ளரி, வெங்காயம், என்பவையும் உணவில் சேர்ப்பது உடலுக்கு ஆரோக்கியம் தரும். ஒத்துக்கொள்ளாத பானம் ஏதும் அருந்தக் கூடாது.

### பிறப்பு எண்கள் தருபவை:

### பிறப்பு எண்:07

சாந்தம், அமைதி, சுபாவம் கொண்டிருப்பார். விட்டுக்கொடுத்து இணங்கிப் போகும் மனப்பான்மை காணப்படும். சாதுரியமாய் நடப்பார். கலை, இரசனை அதிகம் இருக்கப்பெறும். தெய்வ நம்பிக்கை, தெய்வ வழிபாடு இவற்றில் ஈடுபடுவார். காதல் வாழ்வு, கலை ஆர்வம் இரண்டும் மிகுந்து காணப்படும். பார்வைக்கு குழந்தை சுபாவம் காணப்படும். எவ்வாறாயினும் குடும்ப வாழ்வில் சிக்கல்களை சகித்துக் கொண்டே இருப்பார்.

### பிறப்பு எண்:16

நல்ல மனோசக்திகளைப் பெற்றவராய் இருப்பார். நல்ல அபூர்வமான காரியங்களில் ஈடுபட்டு பிரகாசிப்பார். நல்ல கலை ஆர்வம் கொண்டு கவிஞர், நடிகர், பாடகர்என்ற புலமைப் பட்டங்களையும் பெறுவார். சமூகம் வியக்கும் படி பல காரியங்களை செய்து முடிப்பார். சில வேலைகளில் சிலர்தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்டு தண்டனையும் பெறுவார். முறை தவறிய காதல் வாழ்வு இவர்களது குடும்ப வாழ்வை பாதிக்கும்.

### பிறப்பு எண்:25

தீவிர மதப்பற்றுள்ளவர்களாக காணப்படுவார். தான் கடைப் பிடிக்கும் மதத்திற்காக வாதிடுவார். இதனால் அனேகமானோர் இவர்களைப் பின்பற்றுவார். இத் திகதிகளில் பிறப்பவர்களில் அனேகமானோர்மதத்தலைவர்கள், நீதிபதிகள், சபாநாயகர்கள், கிராமத்தலைவர்கள், ஆகிய பதவிகளில் காணப்படுவார். எனவே இவர்கள் மற்றவர்களால் மதிக்கப்படுவார். இவர்களுக்கும் குடும்பவாழ்வில் சுகம் கிடைப்பது குறைவாய் அமையும்.

### பெயர்எண் தருபவை:

### பெயர்எண்:07

இந்த எண் பெயரில் அமைந்தால் உயர்ந்த இலட்சியத்தையும் மேன்மையான சுபாவங்களையும் குறிக்கும். எதிர்பாராத மாறுதல்கள் ஏற்படும். அருள் வளர்ச்சி பெறும். முயற்சிகளை அடிக்கடி மாற்றும் நிலை பெறுவார்.

### பெயர்எண்:16

வாழ்வில் வேகமாக முன்னேற்றம் பெறுவார். ஒரு சிலர்எதிர்பாராமல் தலைகீழாக வீழ்ச்சி நிலையும் பெறுவார். நல்ல கற்பனாசக்தி அமையும். எழுத்தாளராக இருப்பார். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு மிக அவசியமாகும்.

### பெயர்எண்:25

ஆரம்பத்தில் மத்திமமாயும் முடிவில் உத்தமமாயும் பலன்களைக் கொடுக்கும். படிப்படியாக வாழ்வில் பல சோதனைகள், வேதனைகள், போதனைகள் கண்டு வாழ்வில் முன்னேறுவார். எல்லாவற்றிலும் வெற்றி கிட்டுவதன் மூலம் தன்னம்பிக்கையும், ஆன்மீக வளர்ச்சியும், பொதுசன ஆதரவும் கிட்டும். உலக விவகாரம், அறிவு, ஞானம், தெளிவான கருத்து, நல்ல திட்ட அமைப்பு, என்பன அமையப் பெறுவார். ஒரு சிலர்நல்ல ஒழுக்கம், நல்ல ஆசாரம், நல்ல இலட்சியம் கொண்டு முன்னேறுவார். மகாத்மா காந்தி அவர்கள் M.K.GANDHI என்றே கையெழுத்திட்டு வந்ததை நாம் அறிய முடியும்.

### பெயர்எண்:34

நல்ல சுபாவம், ஆர்வம், உழைப்பு இவைகள் இருப்பின் அதிர்ஷ்டகரமானது என்று கூறலாம். படிப்படியாக நல்ல அந்தஸ்தை நோக்கி முன்னேறுவார். பிறந்த திகதி எண்ணும் நன்றாய் அமைந்தால் நல்ல பணம் சம்பாதிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு பொருளீட்டுவார். குடும்ப வாழ்வில் சில சச்சரவுகள், பிணக்குகள், சிக்கல்கள் என சந்திக்க நேரிடும் மதுவும், மாதுவும், வாதும், சூதும், இல்லாதிருப்பின் வெற்றிகள் உண்டு.

### பெயர்எண்:43

இது பாதிப்பானது. வாழ்வில் புரட்சிகரமான மாற்றங்கள் தரும். பலரையும் பகைத்து எதிரிகளை உருவாக்கும். கற்பனாசக்தி, எழுத்தாற்றல், தீவிரவாதம், என்பன அமையப்பெறுவார். போராட்டம், பெரும் தடைகள், புரட்சிகர மாற்றம், என்றவாறு இவர்களது எண்ணம் நிறைவேறும். பொதுசன விவகாரங்களுக்கு இந்த எண் கணிசமாய் பொருந்தும்.

### பெயர்எண்:52

இந்த எண்ணை பெயரில் கொண்டவர்கள் அதிர்ஷ்டகரமான உலகப்பிரசித்தியான மதிப்புக்களைப் பெறுவார். பிறந்த திகதியும் எண்ணும் நன்றாக ஒத்துக் காணப்படின் நல்ல வசீகரம், நல்ல விவேகம், நல்ல புகழ், என்பன கிட்டும். ஆன்மீக வாழ்க்கையில் ஈடுபட்டு உள்ளவராயின் நல்ல பிரசித்திகள் கிடைக்கும். மனதில் எண்ணியவை எல்லாம் கைகூடும். மற்றவர்களுடைய வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்தி நல்ல வாழ்வுக்கு வழிகாட்டி வருவார். சொந்த வாழ்வில் சில துன்பம் உண்டு.

### பெயர்எண்:61

தனது இஷ்டப்படி நடக்க எத்தனிப்பார். இதனால் நன்றாய் அமைந்த வாழ்வில் வெற்றியும், தோல்வியும் மாறி, மாறி அமையும். வாழ்வின் நடுப்பகுதியின் மேல்

நல்ல அதிகாரம் கொண்ட பெரும் பதவிகளை வகிப்பார். ம்பவாழ்வு சிலருக்கு மிக விஷேசமாயும், சிலருக்கு மந்தமாயும் காணப்படும். எவ்வாறாயினும் எடுத்த கருமங்களில் வெற்றிகள் பெறுவார். பெரும் முயற்சிகளில் ஈடுபட்டு பெரும் புகழ் பெறுவார்.

**பெயர்எண்:70**

தீவிரவாதிகளுக்கு இந்த எண் பொருந்தும். இதனால் வெற்றி, தோல்வி, ஏமாற்றம் என்பன இவர்கள் வாழ்வில் மாறி, மாறி அமைந்து காணப்படும். நல்ல சுகமான வாழ்வு பெற்றாலும் பின் பகுதியிலே வெற்றிகள் கிட்டும். கஸ்டம், நஷ்டம் எதுவும் பெரிதாக தெரியாது. பிறப்பு எண் நன்றாயிருப்பின் மாத்திரம் மனத்திருப்தியான மகிழ்ச்சிகரமான வாழ்வை அனுபவிப்பார்.

**பெயர்எண்:79**

வாழ்வில் ஆரம்பம் மந்தகதியில் அமையும். பின்னர்படிப்படியாக தங்களது விவேகம், உபாயம், வீரதீரம் இவற்றால் முன்னேற்றம் பெறுவார். பொதுசன வசீகரம் உண்டு. நல்ல அதிர்ஷ்டம் கொண்டுள்ள அற்புத மனிதர்களாயிருப்பார்.

**பெயர்எண்:88**

ஆத்மீக வாழ்வை இது குறிக்கும். மனதில் அன்பு, கருணை கூடுதலாய் அமையும். நல்ல மதிப்பு, மரியாதை, கௌரவம், என்பன பெற்று வாழ்வார். நம்பினார்கெடுவதில்லை. இது நான்கு மறை உணர்த்தும் என்ற கொள்கைப் பிடிப்புடன் இருப்பார்.

**பெயர்எண்:97**

கலை, கலாசாரம் மற்றும் சாஸ்திரங்கள் என்பவற்றில் ஆர்வத்தை கொடுக்கும். எல்லா விதமான முயற்சிகளிலும் தாமதமாகவேனும் வெற்றி பெற்றே ஆவார். நல்ல லக்சுமிகரமான நிலையையும், மெச்சத்தக்க செயல்களையும் இது குறிக்கும்.

**பெயர்எண்:106**

வாழ்வில் விஷேச மாற்றங்களைத் தரும். வாழ்வில் இடையிடையே சிக்கல்களை சந்திக்க நேரிடும். வாழ்வில் இறுதிக்கட்ட பகுதியில் நல்ல திருப்திகர நிலை இருக்கும். தெய்வ அருட்கடாட்சம் இந்த எண் கொண்டோருக்கு முக்கியமானதாகும்.

**தொழில்.**

கலைத்துறை, எழுத்துத்துறை, மருந்துகள் தயாரிப்பு, உணவு வகை, நீர்வகை, மற்றும் இரசாயனம், பொதுப்பணிகள் என்பன முன்னேற்றத்தைக் கொடுக்கும்.

**அதிர்ஷ்ட நாட்கள்.**

2,11,20,29 திகதி கொண்ட நாட்கள், இதை விட 1,10,19,28 திகதிகளும், கூட்டெண் 2 வரும் நாட்களும் சாதகமானவை ஆகும்.

**துர்அதிர்ஷ்ட நாட்கள்.**


8,17,26 திகதியுள்ள நாட்களும் கூட்டெண் 7,8 வரும் நாட்களும் பாதிப்பானவை ஆகும்.

**வர்ணம்.**

வெள்ளை மற்றும் மஞ்சள், நீலம், பச்சை லோசாகக் கலந்துள்ளவையும் நன்மையளிக்கும். சிவப்பு, கறுப்பு பாதிப்பு தரும்.

**இரத்தினம்.**

வைடூரியம் அதிர்ஷ்டமானது. இதைத் தவிர முத்து, சந்திரக்கல்



(MOON STONE) என்பனவும் நல்லது.

**ஆங்கில எழுத்துக்கள்.**

O,Z என்ற இரண்டு எழுத்துக்களாகும்.

**முக்கிய கவனிப்பு.**

எண் 4 எண் 7 சம்பந்தப்படுபவர்கள் ராகு, கேது சர்ப்பதேசத்திற்கு ஆளாவார். தோச நீக்க பரிகாரமும், அவரவர்இஷ்டமான குல தெய்வ வழிபாடும் சுகம் செய்யும்.





# நீர் வழிந்தோட முடியாத பாலம்

**தீபம் டெலஸ்கோப்**

பாலம் கட்டுவது நீர் வழிந்தோட என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான். ஆனால் நீர் வழிந்தோட முடியாத பாலமும் கட்டப்பட்டுள்ளது என்பதை அறிந்திருக்கிறீர்களா?. அப்படியொரு அதிசயம் யாழ் கலட்டி சேர் பொன் இராமநாதன் வீதியில் கட்டப்படுகிறது.

பாலம் அமைக்கப்பட்டும், நீர் வழிந்தோட முடியாமல், இந்தப் பகுதியில் நீர் தேங்கி நிற்கிறது. எதிர்காலத்தில் இந்த வீதியை பயன்படுத்த முடியாமல் மூடும் அபாயம் ஏற்படும் என்றும் இந்த விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் தீர்க்கமான முடிவுகளை எடுக்க முடியவில்லைஎன்றும் அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஒரு பாலம் கட்டப்படுகிறது. அந்தப் பாலம் நீர் வடிந்தோடக் கூடியவாறு அமைக்கவில்லை என்பதே மக்களை பலவாறாக சந்தேகம் கொள்ள வைத்துள்ளது. 'ஒதுக்கப்பட்ட நிதியில் முறையாக பாலம் கட்டவில்லையென்றால், ஏதோ வில்லங்கம் இருக்க வேண்டும்' என்று அந்தப்பகுதி மக்கள் முணுமுணுப்பதை காது கொடுத்து கேட்க முடிகிறது.

மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் 'கிராமத்துக்கு ஒரு மில்லியன்' திட்ட ஒதுக்கீட்டில், இந்தப்பகுதியில்தேங்கும்நீரைவெளியேற்றும் திட்டத்துக்கு அனுமதி கிடைத்தது. அப்படி ஆரம்பிக்கப்பட்ட திட்டமே சர்ச்சைகளை விலைகொடுத்து வாங்கியுள்ளது. நீரை வெளியேற்றும் முறைப்படியான திட்டம் எதுவும் அதிகாரிகளிடமில்லையென்பது மக்களின் குற்றச்சாட்டு.

இந்தப் பாலத்துக்கு அருகில் ஆனந்த குமாரசாமி பெண்கள் விடுதி அமைந்துள்ளது. இந்த விடுதியே குளத்துக்கு மேல்தான் கட்டப்பட்டுள்ளது. குளம் ஒன்று மூடப்பட்டதால் நீர் வழிந்தோட முடியாது இந்தப் பகுதியில் தேங்கி நிற்கிறது. குளப்பகுதிக்கு நீர் வழிந்தோடி வரும் என்பது இயற்கைவிதி. குளம் மூடப்பட்டால் அங்கு தண்ணீர் தேங்குமென்பதும் சாதாரண அறிவுக்கு தெரியும். இவற்றையெல்லாம் கவனத்தில் எடுத்தே பாலம் கட்ட வேண்டும்.

நீரை வெளியேற்ற எல்லா பக்கத்தாலும் வாய்க்கால்களை அமைத்துப் பார்த்தனர் ஆனால் நீரை வெளியேற்ற முடியவில்லை. ஒவ்வொரு வாய்க்காலாய் மூடி மூடி இப்பொழுது அந்த வீதிக்கு குறுக்கே புதிதாக பாலம் அமைக்கப்படுகிறது. அதன் அருகே புதிதாக வாய்க்கால் அமைக்கப்பட்டுள்ளது. இந்த வாய்க்காலாலும் நீர் வடிந்தோட முடியாது என்பது மக்களின் குற்றச்சாட்டு.

35 ஆண்டுகளாக நீரை வழிந்தோட வைப்பதற்கான முயற்சிகளை பொறியியலாளர்கள் மேற்கொண்டும்முடியாமல்போயுள்ளது. வழிவாய்க்கால் உயரமாக இருந்தால் மட்டுமே நீர் வழிந்தோட முடியும். தாழ்வுப் பகுதியில் இருந்து நீரை வழிந்தோட விட முடியாது. கொக்குவில் நந்தாவில் அம்மன் கோவில் குளம் நிரம்பி வழிந்தால் அந்த நீரும் இங்கே தான் ஓடி வரும்.

இந்த நீரை வழிந்தோட விடுவதற்காக கச்சேரியால் 8 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. மொத்தமாக 1.8 மில்லியன் இந்த திட்டத்துக்கு ஒதுக்கப்பட்டது. வழிவாய்க்கால் கட்டி கட்டி மூடவே இந்த நிதி முடிவடைந்து விடும். பிறகு எங்கே நிதி மிஞ்சப் போகிறது. வெட்டப்படும் மண் ஒரு பக்கத்தால் விற்கப்படுகிறது. பாலத்துக்கு அருகில் மண் போட்டு நிரவாததால் ஒரு ரைக்டர் புதைந்து நிற்பதை படத்தில் காணலாம்.

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள், மக்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் தினமும் சென்று வரும் முக்கிய வீதி இது. திட்டமில்லாமல் பகுதி பகுதியாக கட்டப்படுவதால்; பிரயாணிகள் சிரமங்களை எதிர் கொண்டுவருகின்றனர்.யாழ்மாநகர சபையின் தோல்வித் திட்டம் இதுவாகும்.

மாநகர சபையில் உள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தரிடம் இந்த பாலம் கட்டும் வேலையைப் பற்றிக் கேட்டால் ஒன்றுமே சொல்ல மாட்டாவாம். ஏனெனில் எத்தனை பொறியியலாளர்கள் வந்து பார்த்துவிட்டு தங்களால் முடியாத காரியம் என்று சொல்லிவிட்டுப் போன இந்த வேலைத் திட்டத்தைப் பற்றி இவரால் என்ன சொல்ல முடியும். ஓட முடியாது பாலத்திற்குள் நீர் தேங்கி நின்று டெங்கு மாதிரியான தொற்றுக்களை ஏற்படுத்துமே தவிர இந்தப் பாலத்தால் நீரை வெளியேற்ற முடியாது.

ஒரு கல்வி மானின் பெயரை இந்த வீதிக்கு வைத்துவிட்டு கொஞ்சமும் யோசிக்காமல் செயற்படலாமா என்பதே பிரயாணிகயளின் முணுமுணுப்பு. வீதியின் தொடக்கமான யாழ் பரமேஸ்வராச் சந்தியில் ஒரு மேல் மாடிக் கட்டடம் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் உடைக்கச் சொல்லி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கட்டடம் கட்டும் வரை சபை என்ன செய்து கொண்டிருந்தது? இப்படியான அசமந்தங்கள்தான் மக்கள் மத்தியில் சந்தேகங்களை எழுப்புவது. ஏனெனில், அந்த கட்டிட விவகாரத்தில் 'சம்திங்' இருப்பதாக மக்கள் பேசிக்கொள்கிறார்கள்.

இந்தவீதியின் பெயர் சேர் பொன் இராமநாதன் வீதியாக இருந்தாலும் நாச்சிமார் கோயில் வீதி என்று தான் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. மாநகரசபை இந்த வீதியின் பெயரை பதிவு செய்யவில்லை. இப்படியாக இந்த வீதியின் நிலை பரிதாபகரமாக இருக்கிறது.

பாலத்தில் நீர் தேங்கி இருந்து நுளம்பு பெருகினால் அதிகம் பாதிக்கப்படப்போவது விடுதியில் உள்ள யாழ் பல்கலைக்கழக மாணவிகள்தான். மழை நாட்களில் முழங்காலுக்கு மேல் வெள;ளம் நிற்கும். விடுதி மாணவிகள் வெள்ளத்துக்குள்ளால் நடந்துதான் செல்ல வேண்டியுள்ளது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இந்த வீதி பற்றி கவனம் எடுக்க வேண்டும்.



# உங்கள் பாதங்கள் பத்திரம்

பெண்கள் பலர் முகத்திற்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை கால்களுக்கு கொடுப்பதில்லை. ஆனால் அந்த அக்கறை யீனம் தான் பித்த வெடிப்பு, முரட்டு தன்மை, தடித்த பாதங்கள் என்பவற்றை ஏற்படுத்தி அழகின் பாதியை பறித்து விடுகின்றன. எனவே உங்கள் அழகின் பாதி உங்கள் பாதங்களிலும். செருப்பை தேடி தேடி வாங்கும் நாம் அதற்கு ஏற்றால் போல் எங்கள் பாதங்களையும் பராமரிக்க வேண்டும். உங்கள் பாதங்களை பத்திரமாக பாதுகாக்க சில வழிகள் உங்களுக்காக....

1 மிதமான சுடுதண்ணீரில் சிறிதளவு சம்போ சிறிது உப்பு பாதி தேசிக்காய் சாறு என்பவற்றை கலந்து அந்த தண்ணீரில் பாதங் களை 10 நிமிடம் ஊறவைக்கவும். பின்னர் பாதங்களுக்கென்று விற்பனை யாகும் விற்றமின் ஈ உள்ளடங்கிய கிறீம்களை தடவி மசாஜ் பண்ணி கொள்ளலாம். இது ஆண்களுக்கும் பொருந்தும்.

2 வெட்டப்படாமல் இருக்கும் பாத நகங்களால் இடறுகள் பல. எனவே கட்டர் கொண்டு நகங்களை முழுமையாக வெட்டுவது நன்று. இல்லை நகம் இருப்பதுதான் பிடிக்கும் என்றால் ஓரளவு வெட்டி சேப் பண்ணி விடவேண்டும்.

3 ஒலிவொயில் எண்ணெயை தடவி மசாஜ் செய்து வர பாதங்களில் ஏற்படும் பித்த வெடிப்பு குணமாகும்.

4 வெடிப்புள்ள பகுதியில் எழுந்து நடக்கும் போது வலி இருந்தால் இரவில் படுக்கும் முன்னர் பாமசிகளில் பித்த வெடிப்புக்காக விற்கும் தைலத்தை வாங்கி பூசிவிட்டு தூங்குங்கள். இதனால் வலி போவது மட்டுமின்றி விரைவில் வெடிப்பையும் மாற்ற முடியும்.

5 தினமும் குளிக்கும் போது தரை யில் அல்லது தோய்க்கும் கல்லில் பாதங்களை மென்மையாக தேய்த்து குளியுங்கள். அல்லது அழகு நிலையங்களில் கிடைக்கும் அழுக்கு நீக்கும் கல்லையும் பாவிக்கலாம்.

6 ஈரமான பாதத்தை சோப்பின் நுரையுடன் கல்லில் தேய்த்து கொள்ளுங்கள். பின்னர் கஸ்தூரி மஞ்சள் அல்லது சமையலுக்கு பயன்படுத்தும் மஞ்சளை தடவி வந்தால் வெடிப்பு குணமாகும்.

7 வெவெடிப்புள்ள பாதங்களை ஐஸ்கட்டியில் சிறு நேரம் ஊற வைத்து பின்னர் சந்தன தூளை பூசி 10 நிமிடங்கள் கழித்து பாதங்களை அலசவும். இது போல் செய்து வந்தால் வெடிப்பு சரியாகும்.

8 கடுகு எண்ணெயை வாங்கி சூடாக்கி பாதங்களில் தடவி மசாஜ் செய்து வந்தால் பாதங்கள் அழகாவதுடன் கால் வலி உள்ளவர்களுக்கு கால் வலி நீங்கும்.

9 நகப் பூச்சு உபயோகிப்பவர்கள் வாரம் ஒரு முறை நகங்களில் உள்ள நகப்பூச்சுக்களை நீக்கி சுத்தம் செய்த விட்டு ஒரு நாள் முழுவதம் நகப்பூச்சை பூசாமல் இருப்பது அவசியம். இப்படி செய்வது நகங்களுக்கு நல்லது.


10 தண்ணீரில் றோஜா இதழ்கள் தேசிப்பழ சாறு வேப்பிலை ஆகியவற்றை சேர்த்து சூடுபடுத்த வேண்டும். பின்னர் சுட வைத்த நீரை அற வைத்து மிதமான சூட்டில் கால்களை 20 நிமிடம் வைத்திருக்க வேண்டும். இது போல் செய்து வந்தால் கால்கள் சொர சொரப்பு இன்றி மிருதுவாகும்.

## பிள்ளைகளின் மலச்சிக்களுக்கு காரணம்

உங்கள் பிள்ளைகள் சிறுவர்களாக இருக்கலாம். பெரியவர்களாக இருக்கலாம். மலச்சிக்கலில் அவதியுறுகிறார்களா. உடனடியாக மாத்த முயற்சியுங்கள். சிறு பிரச்சினையான இதனால் பல்வேறுபட்ட சிக்கல்களுக்குள்; சிக்கிமுக்காட வேண்டி ஏற்பட்டுவிடும்.

பெருங்குடலின் முக்கிய வேலை போதுமான அளவு நீரை உறிஞ்சி கழிவுகளை திண்மத் தண்மையாக ஆக்கி வெளியேற்றுவது ஆகும். இதில் சிக்கல் ஏற்படும் பொழுது உணவில் விருப்பமின்மை, மலங்கழிக்க அவதியுற்று அழுதல் போன்றன சிறு பிள்ளைகளிடம் அவதானிக்க முடியும். இந்த சிக்கல் ஏற்பட காரணம் தான் என்ன?

1 நார்த்தன்மையான உணவு உட்கொள்ளாமை.
2 தேவையான அளவு நீர் அருந்தாமை.
3 உடற்பயிற்சி இன்மை.
4 உணவுப் பழக்க வழக்கங்களில் ஒழுங்கின்மை.
5 உயிர்ச்சத்து டி குறைபாடு
6 நீண்ட நேரமாக உடலை ஒரே நிலையில் வைத்திருத்தல்.
7 பெருங்குடல் தசைகளில் சக்தி குறைந்து போதல். இப்படியான காரணங்களே இந்த பிரச்சினைக்கு அடிப்படை காரணியாக அமைகின்றது. எனவே இக் காரணிகளில் இருந்து விடுபடும் போது மலச்சிக்களில் இருந்து எம்மை பாதுகாக்க முடியும்.



## கொழுப்பைக் குறைக்க உதவும் உணவுகள்

செல்வி துவாரகா கோபிராஜேந்திரன்
வவுனியா

உடல் எடையை அதிகரித்து விட்டு அதைக் குறைக்க முடியாமல் ஜிம், உடல்பயிற்சி, உணவில் கட்டுப்பாட்டுடன் இருப்பது போன்றவற்றைபின்பற்றி வருபவர்கள் ஏராளம். ஏனெனில் தினமும் உடலில் இனிப்பு, உப்பு, புளிப்பு போன்றவற்றை சேர்க்க வேண்டும். மேலும் உடலில் எந்தப் பிரச்சினையும் வராமல் இருக்க சரியான உணவு உண்டு வந்தாலே அதிகஉடல்எடையானது குறைந்து விடுவதோடு அரோக்கியமாகவும் வாழலாம்.

**மஞ்சள்**

மஞ்சளானது ஒரு சிறந்த மருத்துவ குணம் வாய்ந்த பொருள் என்பது அனைவருக்கும் தெரியும். அத்தகைய மஞ்சளை தினமும் உணவில் சேர்த்து வந்தால், உடலில் உள்ள தேவையற்ற கொழுப்புக்களைக் கரைத்து, அதிக இரத்த அழுத்தம் ஏற்படாமல், இரத்த சுழற்சி யானது நன்கு இடம்பெற்று இதய நோய் ஏற்படாமலும் இருக்கும்.

**தேன்**

இது உடலைக் குறைக்க ஒரு சிறந்த வீட்டு மருந்து. இதனை உண்டால் உடலில் சேரும் கொழுப்புக்களை சாதாரணமாக உடலில் நடைபெறும் செயல்களுக்கு பயன்படுத்திக் கொள்ளும். ஆகவே தினமும் ஒரு மேசைக்கரண்டி தேனை சூடான நீரில் கலந்து விடியற்காலை குடிக்க வேண்டும்.

**கறிவேப்பிலை**

கறிவேப்பிலை உடலில் இருக்கும் கொழுப்பு மற்றும், டொக்ஸின் போன்றவற்றை உடலில் தங்க விடாமல் வெளியேற்றும். மேலும் அதிக எடை உடையவர்கள் தினமும் 8 முதல் 10 கறிவேப்பிலையை வெறும் வயிற்றில் உண்டால் நல்லது. இல்லையென்றால், அதனை அரைத்து தண்ணீரில் கரைத்து குடிக்க வேண்டும்.

**பூண்டு**

இது கொழுப்பைக் கரைக்கும் ஒரு சிறந்த பொருள் ஏனெனில் இதில் சல்பர் இருக்கிறது. இது ஒரு கிருமிகளை அழிக்கும் பொருளான ஆன்டிபக்டீரியல் இதில் இருப்பதோடு தேவையற்ற கொழுப்புக் களையும் கரைத்து உடலை விரைவாக ஸ்லிம் ஆக மாற்றும்.

மேற்கூறிய இத்தகைய உணவுகளை உண்டாலே உடலானது ஆரோக்கியமாக இருப்பதோடு உடலிலும் எடை கூடாமல் ஆரோக்கியமாக இருக்கலாம்.

# நெற்றியில் பொட்டு எதற்கு?

இன்று பல பெண்கள் மறந்தே போகும் விடயம் பொட்டு. சின்ன பெண் பிள்ளைகள் கூட பொட்டு வைப்பதில்லை. கேட்டால் அதுதான் ஸ்ரைல். இல்லை ஆ...மறந்துட்டனே.. இப்படி தான் பதில். இன்று பெண்களுக்கு பொட்டு முக்கியத்துவம் அற்றதாக போய்க்கொண்டிருக்கின்றது.

பொட்டு மங்களகரம். இறை வழிபாட்டின் பிரதி. மகாலட்சுமியாக பெண்கள் வாழ ஆதாரம். இவை எல்லாவற்றுக்கும் மேலாக நெற்றிக்கு ஏன் பொட்டு தேவையென்பதற்கு விளக்கம் இது.

எமது இரு புருவங்களுக்கு இடையிலும் நெற்றிப் பொட்டு என்ற சொல்வோம். மருத்துவ விளக்கப்படி நினைவாற்றல், சிந்திக்கும் திறன் என்பவற்றிற்கு உரிய இடம் இது. யோகா இதனை ஆக்ஞா சக்கரம் என்று சொல்கின்றது. விஞ்ஞானம் சொல்கின்றது நெற்றிப் பொட்டு மின்காந்த அலையை வெளிப்படுத்தும் என்று. எமக்கு தலையிடி வரும் போதோ நாம் கவலையில் வாடும் போதோ நெற்றிப் பொட்டு குளிர்ச்சியை தந்துஎமதுசக்திவிரயமாவதைதடுக்கின்றது. இதனால்தான் பொட்டு முக்கியத்துவம் பெறுகின்றது.

அது மட்டுமின்றி எமது வீடுகளில் உள்ள பெரியவர்கள் கூறுவது தீய எண்ணங்கள் எம் மனங்களில் எழாமல் பாதுகாக்கின்றது. தீய சக்திகள் பெண்களை அணுகாமல் பாதுகாக்கின்றது என்று. இவர்களின் இந்த கருத்துக்கள் உண்மை பொய்க்கு அப்பால் ஒரு பெண்ணிற்கு பொட்டு அவசியம் என்பது நமது மரபு.

பெண்கள் வெளியில் செல்லும் பொழுது பொட்டு வைக்காமல் போனால் வீட்டில் உள்ள வயதானவர்களோ, அயல்வீட்டுபாட்டியோ சொல்வார் 'பொட்டு வைச்சிட்டு போ பிள்ளை. இப்படி விறுமசத்தி போல போகாத' என்று. இளம் பெண்கள் என்றால் 'அப்பா இல்லாததை போல போகாத' என்பர். திருமணமானவள் என்றால் 'கணவன் இல்லாததை போல போகாத' என்பர். இந்த வார்த்தைகளை கேட்டாலே கான்ட் ஆயிடுவார்கள் தற்கால பெண்கள். 'நீ 90. உனக்கு என்ன தெரியும். சும்மா அலட்டாதே. பொட்டு வைச்சா இப்ப ஸ்ரைல் இல்லை' என்று விட்டு தலையை சிலிப்பி விட்டு போவார்கள் பல ஹீரோயின்கள். சிலர் இந்த மனிசிக்கு வேலையில்ல என்று புறுபுறுத்து விட்டு, எது மிக மிக சின்னதோ அதை ஒட்டி கொண்டு செல்வார்கள்.

ஆனால் பெரியவர்கள் சொல்வதில் ஏதோ ஒரு நியாயம் இருக்கும். பெண்களை தவறான பார்வையில் பார்ப்பவர்கள் கண்களில் இருந்து விடை கொடுப்பதும். மற்றவர்கள் மத்தியில் ஒரு பெண்ணின் நன்மதிப்பை ஏற்படுத்தி கொடுப்பதிலும் பொட்டிற்கு முக்கிய பங்கிருக்கிறது என்பது நமது முன்னோர்களின் நம்பிக்கை.

ஆனால் எது எப்படி என்றாலும் ஆன்மீக, விஞ்ஞான, மரபு என்று எல்லாமே ஒரு பெண்ணிற்கு பொட்டு முக்கியம் என்பதையே வலியுறுத்துகிறது. அது பெண்ணிற்கே உரிய அடையாளம். எனவே தமிழ் பெண்கள் என்ற ரீதியில் பொட்டை சிதறாமல் பொத்துவது ஒவ்வொரு பெண்ணின் கைகளிலும் உள்ளது.



# மாதவிடாய் காலத்து வலி



Dr.M.தக்ஷாயினி
Amoh- nallur



மாதவிடாய் காலத்து வலியானது அனேக பெண்களின் பிரச்சனைகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது. மிகப் பிரதானமான இளம் பெண்கள் பருவமடைந்தது முதல், முதல் 5 வருடங்களுக்குள் இவ்வாறான பிரச்சனைகளை எதிர்கொள்கின்றனர். பொதுவாக மாதவிடாய் காலத்து வலியானது வயது செல்லச் செல்ல குறைவடைந்து செல்கின்றது.

மாதவிடாய் காலத்து வலியை நாம் 2 பிரிவாக வகைப்படுத்தலாம்.

1 ஒன்று உடலில் இனங்காணப்படாது மறைந்திருக்கும் காரணிகளால் (underlying cause) ஏற்படும் வலி.

2 உடற் தொழிலியல் ரீதியாக ஏற்படும் வலி.

உடலில் இனங்காணப்படாது மறைந்திருக்கும் காரணிகளால் ஏற்படும் வலியானது, என்டோமற்றியோசிஸ் (endometriosis), இடுப்பு குழியில் ஏற்படும் தொற்று (PID), கருப்பை கட்டிகள் (fibroias), பிறக்கும் போதே ஏற்படும் சில குறைபாடுகள் (congenital abnormalityô) என்பவற்றாலும் ஏற்படுகின்றது.

எனினும் மாதவிடாய் காலத்தில் ஏற்படும் வலியில் பெரும்பான்மையானவர்கள் பாதிக்கப்படுவது உடற் தொழிலியல் ரீதியாக ஏற்படும் மாற்றங்களினால் உண்டான வலியினால் ஆகும். ஆகவே நாம் பிரதானமாக உடற் தொழிலியல் மாற்றங்களினால் ஏற்படும் நோயைப் பற்றிப் பார்ப்போம்.

இவ் வலியானது பிரதானமாக மாத்விடாய் சக்கரத்தில் ஏற்படும் மாற்றங்களின் போது கருப்பை உட்புறத்தில் செறிவடையும் புரஸ்ரோக்கிளான்டின் (prostoglanudin) எனப்படும் இரசாயன 'பதார்த்தங்களினால் ஏற்படுகின்றது. இவ்வாறு செறிவடையும் போது கருப்பை தசைகள் சுருங்கி விரிகின்றன. இதனால் கருப்பை தசைக்கானுக்குச் செல்லும் இரத்த ஓட்டம் குறைவடைந்து, கிடைக்கும் ஒட்சிசனின் அளவும் குறைவடைகின்றது. இதனால் வலியுடன் கூடிய அசௌகரியம் உணரப்படுகின்றது. அத்துடன் புரஸ்ரோகிளான்டின் (prostoglanudin) மாதவிடாய் நேரத்தில் ஏற்படும் சக்தி, வயிற்றோட்டம் என்பவற்றிற்கும் காரணமாய் அமைகின்றது. இதை விட ஒருவரின் மனோரீதியிலான காரணிகளும் செல்வாக்கு செலுத்துகின்றன. இவ்வாறான காரணிகளால் ஒருவருக்கு ஒருவர் வலியுணர்வு வேறுபடுகின்றது.

உடற் தொழிலியல் ரீதியாக ஏற்படும் மாதவிடாய் காலத்து வலியின் போது பின்வரும் அறிகுறிகள் ஏற்படுகின்றன.

- அடிவயிற்றில் பிசைவது போன்ற வலி பொதுவான பரப்பென்பிற்கு மேற்பகுதியில் ஏற்படும். சில நேரங்களில் நாரி, தொடை, பகுதிகளிலும் வலியுணர்வு ஏற்படும்.
- வலியானது மாதவிடாய் காலத்து இரத்த போக்கிற்கு சில நாட்கள் அல்லது சில மணி நேரங்கள் முன்பாக ஏற்படுகின்றது.
- இது படிப்படியாக ஒன்று தொடக்கம் மூன்று நாட்களில் குறைவடைந்து சென்றுவிடும்.
- சத்தி, வயிற்றோட்டம், தலைச்சுற்று, தலையிடி, களைப்பு, காய்ச்சல் போன்ற உணர்வு போன்றவையும், சிலரிற்கு ஏற்படும்.

இவ்வாறான நிலையை தடுப்பதற்கு பின்வரும் முறையை கடைப்பிடிக்கலாம்.

- மாதவிடாய் அறிகுறிகள் ஏற்படும் போது சாதாரண வலி நிவாரணி (paracetamol) உட்கொள்ளல்.
- மாதவிடாயின் போது அடிவயிற்றில் சுடுநீர் கொண்ட போத்தல் (hot water bottle), சுடுபந்தணம் (heating pad) மூலம் ஒத்தடம் கொடுத்தல்.

இவை தவிர,

- உடற் பயிற்சிகள் மேற்கொள்ளுதல்
- யோகாசனப் பயிற்சிகளை மேற்கொள்ளல்.

மேலும் நண்பர்கள், குடும்பத்தவர்களின் ஆதரவும், உள ரீதியான வலிமையை பெறுவதற்கும், இவ்வாறான மாதவிடாய் கால பிரச்சனைகளை மனத்திடத்துடன் எதிர்கொண்டு வலியில் இருந்து விடுவித்துக் கொள்வதற்கும் மேலும் உறுதுணையாக விளங்கும்.

மேற் குறிப்பிட்ட படி செயற்பட்டும் வலி குறையவில்லை என உணர்பவர்கள் பெண் நோயியல் நிபுணரின் ஆலோசனையை பெறுவதன் மூலம் ஸ்ரீரொயிட் அல்லாத வலி நிவாரணி, கருப்பை மாத்திரைகள் போன்ற பல்வேறு பட்ட சிகிச்சை முறைகளை பெற்றுக் கொள்ள முடியும்.



# வடக்கின் வலசைப் பறவைகள்

## நீர்ல்பூக்கும் வெளிநாட்டு பறவைகளின் அதிசய உலகம்

பறத்தலின் இரகசியம் 1



கணபதிப்பிள்ளை அசோகன்
Asokan 2301@gmail.com

வடபகுதியிலுள்ள களப்புக்கள் மற்றும் கடல்நீரேரிகளினோரமாகபிரயாணம்செய்வபவர்களிற்கு அருமையான காட்சிகளை காண முடியும். மாரிகளத்தில் மட்டுமே இந்த காட்சிகளை காணமுடியும். ஆனையிறவு, முல்லைத்தீவை சூழ்ந்த பாலங்கள், கொக்கிளாய், நாயாறு, மன்னார்ப்பாலம், பூநகரி, பொல்லை, கைதடி, நாவற்குழி, பண்ணைப்பாலம், புங்குடுதீவுப் பாலம், மற்றும் பொன்னாலை ஆகிய பிரதேசங்களில் ஒக்டோபர் அல்லது நவம்பர் மாதம் தொடக்கம் மார்ச் அல்லது ஏப்பிரல் வரை இந்தக் காட்சியைக் காணலாம்.

சிறியது தொடக்கம் நடுத்தர அளவிலான பறவைகள் மிகப் பெரிய பறவைக்கூட்டங்களாக நீர்ப் பரப்பிலும் அதனை அண்டியதான பிரதேசங்களிலும் பறந்தும், நீந்தியும் உணவைத் தேடிக்கொண்டும் இருக்கும்.

இந்தக் கட்டுரையாளர் தமது முதலாவது பல்கலைக்கழகப் பாடத்தினைக் கற்றுக்கொண்டிருந்தபோது ஒவ்வொரு நாளும் பொல்லைப் பாலத்தை கடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது அவரின் கண்ணுக்கு தெரியாத இந்த வலசைப் பறவைகள் அப்போது அவருக்கு அழகானவையாகவும், அறிவுப்பசிக்கு விருந்தாளியாகவும் விளங்கியது. இதற்குக் காரணம் முன்னர் அவரிடம் இல்லாத வலசைப்பறவைகள் பற்றிக்கிடைத்த தெளிவான அறிவூட்டலும், அனுபவப்பகிர்வுமே ஆகும்.எனவே வலசைப் பறவைகள் பற்றிய இந்தக் கட்டுரைத் தொடரை வாசிப்பதன் ஊடாக வடபகுதியைச் சேர்ந்தவர்களும், இங்கு வந்து போகின்றவர்களும் மாரிகாலத்தில் இங்கு அதிகளவில் காணப்படும் (அனேகமாக ஏனைய இடங்களில் இந்த அளவு செரியலாகக் காணப்படுவது இல்லை) வலசைப் பறவைகளை அறிவுபூர்வமாக, உணர்வுபூர்வமாக அனுபவித்து நன்மை பெற வேண்டும் என்பதே இந்தக் கட்டுரையாளரினதும், தீபம் பத்திரிகை நிறுவனத்தினதும், ஆர்வமும், விருப்பமும் ஆகும்.

இந்தக் கட்டுரைத் தொடரில் வலசைப் பறவைகள் என்றால் என்ன? அவை எங்கிருந்து வருகின்றன? அவை எந்தப் பாதையால் வருகின்றன? ஏன் இலங்கையின் வடபகுதியில் மிக அதிகளவில் வந்து போகின்றன? இலங்கைக்கு எந்தெந்த இனப் பறவைகள் வெளிநாட்டில் இருந்து வந்து போகின்றன? அவற்றின் மாரிகால வாழிடங்களைப் பாதுகாப்பதற்கு வடபகுதியில் வாழ்கின்ற மக்களும், அதிகாரிகளும், அரசியல் தலைவர்களும், என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி விரிவாக ஆராய்வோம்.


**வலசைப் பறவைகள் என்றால் என்ன?**

தமிழில் பண்டைய இலக்கியங்களில் வலசைப் பறவை என்று குறிப்பிடப்பட்ட இந்த வகைப் பறவைகளை தற்போது சாதாரண, நாளாந்த பாவனையில் குடிபெயர் பறவைகள், வெளிநாட்டுப் பறவைகள் என்றும் குறிப்பிடப்படுகின்றனர்.

உண்மையில் இந்தப் பறவைகளின் குடிபெயர்தல் என்ற செயற்பாடு ஏனைய சாதாரண, நாளாந்த அவற்றின் இடப்பெயர்வில் இருந்து வேறுபடுகிறது. சாதாரணமாக பறவைகளோ அல்லது விலங்குகளோ உணவு, உடை, பாதுகாப்பு மற்றும் தமது இனப்பெருக்க வாழ்க்கைத்துணை ஆகியவற்றுள் ஒன்றையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டதையோ தேடி ஒவ்வொரு நாளும் அல்லது ஒரு சில வேளை ஓய்வு எடுத்து ஓய்வு எடுத்தே இடம்பெயரும்.

இங்கு அவர்களுடைய அசைவு (இடப்பெயர்வு) ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட திசையிலேயோ அல்லது வருடத்தில் குறிப்பிடப்பட்ட பருவகாலங்களில் மாத்திரம் நிகழ்வதாகவோ இருக்க மாட்டாது. எழுந்தமானமாக இருக்கும். வலசைப் பறவைகளின் குடிப்பெயர்வு வருடத்தில் குறிப்பிட்ட பருவகாலங்களில் நிகழும். ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட பாதைகளில் (அந்தப் பாதைகள் அவற்றின் மூதாதையர் காலத்தில் இருந்து மில்லியன் கணக்கான வருடங்களாக மாறாமல் இருக்கிறது என்பது இன்னும் மனிதனுக்கு புரியாத மர்மம் நிறைந்தது ஆகும்) போய் வருவதாகும். முழு உலகத்தினையும் எடுத்துக் கொண்டால் குடிபெயர் பறவைகள் வெவ்வேறு இனப்பெருக்க இடங்களையும், குளிர்கால இரைதேடும் தளங்களையும் கொண்டது.

இந்தக் கட்டுரை இலங்கையின் வடபகுதிக்கு வந்து போகும் வலசைப் பறவைகள் பற்றியே அதிகம் கூற இருப்பதனால் அது இலங்கைத்தீவுடன் தொடர்புடைய ஆசியன் குடிபெயர் பறவைப் பாதையுடன் சம்பந்தப்பட்ட பல விடயங்களை பற்றியே அதிக ஆழமாக உதாரணத்துடன் ஆராய உள்ளது. சந்தர்ப்பம் கிடைக்கும் போது ஏனைய குடிபெயர் பறவைப் பாதைகளுடன் தொடர்புடைய நாடுகள், பறவைகள், மாதங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் பற்றியும் விளக்கம் தரப்படும்.




**இலங்கைக்குஎந்தப் பாதையால் வலசைப் பறவைகள் வருகின்றன?**

இந்தக் கட்டுரையில் ஏற்கனவே குறிப்பிட்ட படி வலசைப் பறவைகள் தமது இனப்பெருக்க தாய்ப்பிரதேசங்களில் இருந்து ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட ஒரு குறித்த பாதையிலேயே இலங்கைக்குள் உட்புகுகின்றன.

இலங்கையின் ஆசிய குடி பெயர் பறவைகள் பாதை என்ற பொதுப் பாதையில் குறிப்பாக மத்திய ஆசிய குடிபெயர் பறவைகள் பாதை என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ள பாதைகளினாலேயே வந்து போகின்றன. இந்தப் பறவைகள் இது வரையில் முன்னேற்றகரமான நவீன விஞ்ஞான முறைப்படி உறுதிப்படவில்லை. காலகாலமாக பறவைகள் அவதானத்தில் தனிப்பட்ட ஆர்வம் உள்ள கடல் மாலுமிகள் அவதானித்தவற்றை அடிப்படையாக வைத்தே உருவாக்கப்பட்டுள்ளன. கடந்த 30 வருட யுத்ததினால் இது சம்பந்தமான ஆய்வு யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதற்கு சாத்தியகூறு குறைவாகையால் நாம் அயல் நாடான இந்தியாவுடன் ஒப்பிடும் போது பின் தங்கியே நிற்கிறோம்.





Map from the book 'Sirilaka Kurullo'

தற்போதைய சாதகமான சூழலில் பல ஆய்வுகளை செய்வதன் ஊடாக மிக அரிய தகவல்களைப் பெறலாம். ஏற்கனவே அனுமானத்தின் அடிப்படையில் பெறப்பட்ட தகவல்களை உறுதிப்படுத்தலாம். இதற்கான பல்வேறு முன் எடுப்புக்கள் செயற்படத தொடங்கியுள்ளது. இலங்கைக்கு பறவைகள் வந்து போகும் பாதையை ஆய்வாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.

1. கிழக்கு பாதை
2. மேற்கு பாதை
3. அந்தமான் பாதை

கிழக்கு பாதை என்னும் போது இந்தியாவின் கிழக்கு கடற்கரையோரமாக வரும் பறவைகள் தொடர்ச்சியாக கரையோரமாக வந்து யாழ்ப்பாணத்துக்குள் உட்புகுகின்றன.

கிழக்கு பாதையால் வரும் பறவைகள் வட அரைக்கோள நாடுகளான சைபீரியா, கிழக்காசிய நாடுகளான மொங்கோலியா மற்றும் இந்தியாவின் வடக்கு மற்றும் வடகிழக்கு பிரதேசங்களில் இருந்து வருகின்றன. இவை இந்தியாவின் கிழக்கு கரையின் ஊடாக பறந்து வந்து இந்தியாவின் முனையில் வெளியேறி இலங்கைக்குள் யாழ்ப்பாண குடாநாட்டுக்குள் உட்புகுகின்றன.

மேற்கு பாதையாக வரும் பறவைகள் மேற்கு சைபீரியா, இமயமலைக்கு மேற்கு மற்றும் வட மேற்கு பிரதேசங்கள் மற்றும் தூர கிழக்காசிய நாடுகளின் வட அரைக்கோள நாடுகள் மற்றும் ஐரோப்பிய நாடுகளிலில் இருந்து வருகின்றன. இவை இந்துநதி பள்ளத்தாக்கின் ஊடாக பாகிஸ்தான் வழியாக இந்தியாவின் மேற்கு கரையை அடந்து, அதன் வழியாககுமரிமுனையை அடைந்து, அங்கிருந்து பாக்கு நீரிணையைக் கடந்து, இலங்கையின் மேற்கு கரையில் வெவ்வேறு இடங்களில் உட்புகுகின்றன. இந்தப்பாதையில் வரும் பறவைகள் கௌதாரி முனையில் இருந்து களுத்துறை வரையுள்ள கடற்கரையோரங்களில் உட்புகுகின்றன. வெவ்வேறு பறவைகள் வெவ்வேறு இடத்தினை தேர்ந்தெடுக்கின்றன. இதற்கான விளக்கம் ஆய்வாளருக்கு இன்னும் கிடைக்க வில்லை.

மேற்கூறிய கிழக்குப் பாதை மற்றும் மேற்குப்பாதையின் ஊடாகவே இலங்கைக்கு வெளிநாடுகளில் இருந்து பெரும்பாலன பறவைகள் வருகின்றன.

மூன்றாவது பாதை இலங்கையின் கிழக்குக் கரையில் பறவைகள் உற்புகுவதற்கான பாதையை தருகின்றது. இவ் மூன்று பாதை பற்றிய விபரிப்பை இக்கட்டுரையின் பிறிதொரு அத்தியாயத்தில் காண்போம்.

**(அடுத்த வாரமும் பறக்கும்)**

---



# காதல் சிலுவையில்: நான்கு

**த.அகிலன்**
t.agiilan@gmail.com

இன்றைக்குப் பெய்த மழையும் உன் முத்தங்களை நினைவூட்டிற்று. என்னால் உன்னைப் போல் சலனமற்றிருக்க முடியவில்லை. நீ கலைத்துவிட்டுப்போன எனது வசிப்பிடம் ஒழுங்கற்றுகிடக்கிறது. நான் என் பிரியங்களையெல்லாம் ஒன்று திரட்டி உனது திசைகளில் ஏவினேன். ஓய்ந்த மழையின் பின் சொட்டிக்கொண்டிருக்கும் இலைகளின் துளியைக் கைகளில் ஏந்திக்கொள்ளுகையில் உன் குரலின் ரகசியங்கள் அதில் ஒளிந்து கொண்டிருப்பதாய் படுகிறதெனக்கு. நீ ஒரு குட்டிப்பெண்... சில சமயம் அம்மா... என் திசைகளில் படர்ந்த இருள் நீ விலக்கியது. இப்போது கவிந்திருப்பதும் நீ அளித்ததே.

நீ வெளியேறியபின்.. நான் உன்னை நினைவூட்டும் எல்லாவற்றையும் வெளியேற்ற எண்ணினேன். அப்போதுதான் இந்த பூமியின் எல்லாமே உன்னை நினைவுறுத்த வல்லதென்றறிந்தேன். எதையும் வெளியேற்ற முடியவில்லை உன்னையும். நீ ஏகிய திசைகளைக் காத்துக்கிடந்தேன். உன் புன்னகையை நினைவிருத்தி ஒரு ஓவியம் செய்ய எண்ணியிருக்கிறேன். பிரிவின் குருரம் வழியும் அந்த வெளிறிய ஓவியத்திலும் உயிர்ப்புடனிருக்கிறது உனது புன்னகை..

> **நீ ஏகிய திசைகளைக் காத்துக்கிடந்தேன். உன் புன்னகையை நினைவிருத்தி ஒரு ஓவியம் செய்ய எண்ணியிருக்கிறேன். பிரிவின் குருரம் வழியும் அந்த வெளிறிய ஓவியத்திலும் உயிர்ப்புடனிருக்கிறது உனது புன்னகை..**

இந்த உலகத்தில் போதையற்றது எது வெற்றி போதை, புகழ் போதை பணம் போதை போதைக்குள் சிக்கிக்கொண்டிருக்கிறது உலகம். உலகம் விரும்புவதும் கூட அதைத்தான். நானும் உன்னில் போதையாயிருந்தேன். அது காதல் போதை.. உன் பிரியத்தின் வார்த்தைகளில் கிறங்கிக் குழந்தையாய்க் கிடக்கிறபோதை. தாலாட்டுக் கேட்காமல் தூங்கமறுக்கும் குழந்தையைப்போல உனது பிரியங்கள் இல்லாத ஒரு கணப்பொழுதின் வெறுமையைத் தாங்கிக்கொள்ள வியலாமல் நான் பரிதவிக்கிறேன்.

நான் இனிமேல் அதை எங்கேயும் பெறமுடியாது. அதைத் தரக்கூடியவள் நீ நீ மட்டுமே. நான் ஒரு ஆடு.. பலியிடக்காத்திருக்கிற ஆடு.. உனது புன்னகையின் பின்னால்ஒளிந்திருக்கும்விசமத்தின் கொடுவேர்களைக் கண்டு கொள்ளத் திராணியற்றவனாகி புன்னகைக்கும் தொழிநுட்பம் வாய்க்கப்பெறாமல் அழுது கொண்டிருப்பவன் தன்னிரக்கமும் இயலாமையும் மேலிட..

நீ சலனமின்றி வெளியேறினாய். பிரிவின் சொற்களை அனாசயமாய் அள்ளிஇறைத்தபடி நான் காத்துக் கிடந்தேன்.. நீ வரும் திசைகளை நோக்கிக்கொண்டு. அம்மாவின் வியர்வை படிந்த கரங்களுக்குள் பொத்திவைத்து எடுத்து வரப்போகும் மிட்டாய்க்கு காத்திருக்கும் ஒரு குட்டிப்பையனைப் போல நீ எனக்கான பிரியத்தை எடுத்து வருவாய் எனக்கனவுகள் கொண்டிருந்தேன். நீ குறு வாட்களை எடுத்துவந்தாய்... எனது கனவுகளைக் கிழித்தபடி உன்னோடு போயின அவை. நான் உன் அடிமை என்னை எடுத்துச்செல் என்றுகதறினேன். நீ புன்னகைத்தபடி கடந்தாய்...வழிகளில் மிதியுண்ட என் பிரியத்தின் சொற்களை புறங்காலால் விலக்கியபடி நெடுவழி நடந்தாய். கடைவாயில் வழிந்த ஏளனத்தின் கொடுந்தீயில் பற்றி எரிகிறதென் பிரியம்.

நான் அப்போதும் பூச்செண்டுகளைப் பரிசளித்தேன்.. நீ பூக்கள் சூடுவதில் இப்போதெனக்குப் பிரியமில்லை என்றாய்.. சரி உனக்குப் பிரியமானதைச் சொல் செய்கிறேன் என்றேன்.. உண்மையில் நான் எல்லாவற்றுக்கும் தயாராய் இருந்தேன்.. எல்லாவற்றுக்கும்.. ஆனால் நீயோ நான் செய்வதெதுவோ அது உனக்குப் பிரியமானதாய் இருக்காதென்பதில் உறுதியாய் இருந்தாய்.

வெறும் ஆய்வுகூடப் பரிசோதனைக் குழாய் போல என்னை ஆக்கி அன்பை ஊற்றி நிரப்பி என்னவாகிறேன் என்று பரிசோதித்து விட்டு கழுவிக்காயவைத்து விட்டு வெளியேறினாய் நீ. வெளியேறிப்போனபின்பும் நான் எதிர்வினைகள் ஆற்றிக்கொண்டிருந்தேன். உனது குறிப்பேடுகளில் எழுதிக்கொள்... அன்பின் எதிர்வினைகள் ஆயுளுக்கானவை அவை நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது முடிவிலிக்காலம் வரை என்று.

**புதியகாலைகளும்**
**பழையநினைவுகளும்..**
தினமும்
புதிய காலைகளை
எதிர் கொள்ளவேண்டியிருக்கிறது
பழைய நினைவுகளுடன்..

இன்றைக்கும் மழை
உன்னிடம்
என் பிரியத்தை சொன்ன
அன்றைக்கு
பொழிந்ததைப்போலவே
பொழிகிறது.
மழையிடம் மாறுதல்கள்
கிடையாது..
இலையின் முதுகில்
ஒழிந்திருக்கும்
பனித்துளியைப்போலப்
பதுங்கிக் கிடக்கிறது
என் துயரம்
சூரியனால் எடுத்துச்செல்ல
முடியாதபடி

# துஷ்மந்த சமீர: காத்திருக்கும் சவால்



அன்ரூ இன்னேஷ்

நியூசிலாந்துடனான இரண்டு டெஸ்ட் போட்டித் தொடரை இலங்கை நிறைவு செய்துவிட்டது. எதிர்பார்த்த முடிவுதான். இலங்கையின் இளைய வீரர்கள் நியூசிலாந்தில் வைத்து தொடரையல்ல, ஒரு போட்டியை வெல்வதென்பதே நினைத்தும் பார்க்க முடியாத விடயம்தான். அதுவும், பாகிஸ்தான், இந்தியாவுடன் டெஸ்ட் ஆடிய விதத்தை வைத்து பார்த்தபோது, ரசிகர்கள் ஸ்கோரை பார்க்கவே விரும்பியிருக்கமாட்டார்கள்.

ஆனால், நியூசிலாந்துடனான இரண்டாவது போட்டி சற்றும் எதிர்பாராதது. அண்மைய பல போட்டிகளில் இலங்கையணியில் காணக்கிடைக்காத போராடும் தன்மை வெளிப்பட்டது. போட்டியின் ஒரு கட்டத்தில் வெற்றிவாய்ப்பு யாருக்கும் செல்லலாமென்ற நிலை வந்தது. ஆனால் இந்த வருடத்தின் 'டெஸ்ட் ஹீரோ' கேன் வில்லியம்ஸன் தனி ஆளாக நின்று அதனை முறியடித்துவிட்டார். கேன் வில்லியம்ஸன் போன்ற ஒரு சர்வதேசவீரரை எதிர்கொள்ளும் அளவிற்கு இலங்கையணி இன்னும் முழுமைபெறவில்லையென்பதை அந்த போட்டி காண்பித்தது.

இரண்டாவது இன்னிங்சில் 3 விக்கெட்டிற்கு 78 ஓட்டம் என்ற நிலையிலிருந்த நியூசிலாந்து, அதன் பின்னர் எந்த விக்கெட்டையும் இழக்காமல் வெற்றியிலக்கை அடைந்தது. வில்லியம்ஸனின் அபாரமாக சதம்தான் போட்டியின் போக்கை மாற்றியது. வில்லியம்ஸனின் கரியரில் இந்த சதம் மகத்தானது என்பதில் எந்த சந்தேகமுமில்லை. அந்த சமயத்தில் போட்டியை முழுமையாக கைக்குள் வைத்திருந்த சமீரவிடமிருந்து அவர் கைமாற்றி பெற்றார். சமீர போன்ற ஒரு அசாத்தியமான பந்துவீச்சாளரை நீண்டநேரம் தாக்குப்பிடிப்பதென்பது அரிதான ஒரு நிகழ்வுதான்.

இலங்கை இந்த போட்டியில் தோற்றாலும், பல்வேறு விடயங்களில் இலங்கையணி கவனத்தை ஈர்த்தது. குறிப்பாக அண்மைய தொடர் டெஸ்ட் தோல்விகள், பந்து வீச்சு, துடுப்பாட்ட பலவீனங்கள் இரசிகர்களையே வெறுப்பேற்றும் விதத்தில் இருந்தது. நியூசிலாந்திற்கு முன்னதான மேற்கிந்தியாவுடனான தொடர், ஒரு ஆறுதல் தொடரேயன்றி, இலங்கை கிரிக்கெட்டில் திருப்தி கொள்ள எதுவுமில்லை.

அந்த தொடர்கள் எல்லாம் சொந்தமண்ணில் நடந்தவை. சொந்தமண்ணிலேயே மெகா சொதப்பல் செய்த அணி, நியூசிலாந்து போன்ற வேகப்பந்து வீச்சு களங்களில் கிடுகிடுத்துப் போவது வழக்கம். இப்போதைய நியூசிலாந்து டெஸ்ட் அணியென்பது நல்ல கலவையான, சீனியர் அணி. வேகப்பந்து களங்களில் ஆசிய அணிகளின் கிடுகிடுப்பு இம்முறை 'மரியாதைக்கேடான' அளவில் இருக்குமென்ற அச்சமும் இருந்தது.

ஆனால் இளம் இலங்கையணி ஓரளவு அதனை சமாளித்திருக்கிறதென்றே கூற வேண்டும். இரண்டாவது டெஸ்ட்டின் இரண்டாம், மூன்றாம் நாள்களிலும் நான்காம் நாளின் முற்பாதியிலும் இலங்கை தெளிவான ஆதிக்கம் செலுத்தியபோதும், பின்னர் அது கைவிட்டு சென்றுவிட்டது.

இலங்கையின் இளம் வேகப் பந்துவீச்சாளர் துஷ்மந்த சமீரதான் இரண்டாவது போட்டியை ஆதிக்கம் செலுத்த காரணமானது. முதல் இன்னிங்சில் ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இரண்டாவது இன்னிங்சில் நான்கு விக்கெட்டுக்கள்.

துஷ்மந்த சமீர பற்றி ஏற்கனவேயும் குறிப்பிட்டிருந்த நினைவுண்டு. இலங்கையின் வேகப்பந்துவீச்சை தலைமை தாங்குபவராக விரைவில் அவர் உருவெடுப்பார் என கூறியிருந்தோம். அதனை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கும் விதமான பெறுபேறுகளை ஒவ்வொரு போட்டிகளிலும் வெளிப்படுத்தி வருகிறார். 140 கிலோமீற்றர்களிற்கும் மேலாக துல்லியமாகவும், நல்ல அளவிலும் வீசிவரும் அவர் சில போட்டிகளிலேயே எதிரணிவீரர்களிற்கு அச்சுறுத்தலானவராக மாறிவிட்டார்.

அவரது பெறுபேறுதான் இலங்கையை மேலெழ வைத்தது. துடுப்பாட்டத்தில் மத்தியூஸ், சிறிவர்த்தனவின் அரைச்சதங்களும் ஓரளவு கைகொடுத்தது. எனினும், இந்த மேலாதிக்கத்தை இலங்கை கைவிட கேன் வில்லியம்ஸன் மட்டும் காரணமல்ல. முன்னதாக இலங்கையின் துடுப்பாட்ட சறுக்கலும் ஒரு காரணம்.

இந்த தொடரில் பந்துவீச்சாளர்களின் பெறுபேறுகள்தான் இலங்கைக்கு சாதகமாக அமைந்தது. துடுப்பாட்டவரிசை முன்னரைப் போல சிக்கலானதாகவே உள்ளது. சந்திமால் மட்டுமே தொடர்ச்சியாக ஓரளவு சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்துகிறார்.

ஆரம்ப வீரர்கள், பின்வரிசை வீரர்கள் சிறப்பானநிலையை இன்னும் எட்டவில்லை. ஓரளவு சிறப்பாக ஆடும் மத்தியவீரர்கள் பெரிய இன்னிங்ஸ்களை இன்னும் ஆடத் தொடங்கவில்லை. அவர்கள் பெரிய இன்னிங்சை ஆடும்வரையும் இலங்கைக்கு வெற்றியென்பது சாத்தியமில்லை.

இந்த டெஸ்ட்டில் சமீரவை போல நம்பிக்கையளித்த இன்னொருவர் மிலிந்த சிறிவர்த்தன. பின்வரிசை ஆட்டக்காரரான அவரது சகலதுறை ஆட்டம் நம்பிக்கையளிப்பதாக இருந்தது. என்றாலும், நான்கு இன்னிங்சிலும் சேர்த்து ஒரேயொரு அரைச்சதம் தான் அவர் அடித்தார்.

தொடக்க ஆட்டக்காரர்களின் தடுமாற்றம், மூன்றாமிலக்கத்தில் நிலையான வீரர் பிரச்சனைகள் தான் தற்போதைய இலங்கையின் தலையாய பிரச்சனை. இம்முறை மூன்றாமிலக்கத்தில் இளம்வீரர் ஜெயசுந்தர களமிறங்கினார். ஒரு அரைச்சதம் கூட அடிக்கவில்லை. புதியவீரரென்பதன் அடிப்படையில் அவருக்கு இன்னும் வாய்ப்புக்கள் வழங்க வேண்டும். எனினும், அவரை இப்பொழுது மூன்றாமிலக்கத்தில்த்தான் களமிறக்க வேண்டுமா என்பதை தேர்வாளர்கள் சிந்திக்க வேண்டும். இப்போதைய அணியில் தற்காலிகமாகவேனும் சந்திமாலை மூன்றாமிலக்கத்தில் களமிறக்கலாம். சில சமயங்களில் அதுவும் விசப்பரிட்சையாக முடியலாம். எனினும், இப்போதைய அணியின் சீனியர் என்பதன் அடிப்படையில் சந்திமால் அந்த சவாலை எதிர்கொள்ளலாம்.

இப்போதைய அணியில் சமீர, ஹேரத் என்ற இரண்டு பந்துவீச்சாளர்கள்தான் நம்பிக்கையளிப்பவர்களாக உள்ளனர். ஹேரத் தனது கிரிக்கெட் வாழ்வின் அந்திமகாலத்தில் இருக்கிறார். அவரின் பின் யார் சுழற்பந்துவீச்சாளர் என்பதற்கும் சரியான விடையில்லை. சேனநாயக்க, மெண்டிஸ், ரன்டீவ் யாருமே டெஸ்ட் பந்துவீச்சாளர்களாக மிளிரவில்லை.

ஹேரத்தும் இல்லாத அணியில் பந்துவீச்சு சுமையை சமீர சுமக்கும் நிலைதான் வரப்போகிறது. அப்பொழுதும் சமீர சர்வதேச கிரிக்கெட்டை முழுமையாக கற்றுக்கொள்ளாத இளம்கன்றாகத்தான் இருப்பார். குருவியின் தலையில் பனம்பழத்தை வைத்த கதையாகத்தான் அது முடியலாம். சமீர என்ற வீரனை மகத்தான வீரனாக்குவதற்கென்றாலும் இன்னும் சிலர் அணியில் நன்றாக ஆடத் தொடங்க வேண்டும்.



## கசிப்பு காய்ச்சியவர் கைது

யாழ்ப்பாணம் சுழிபுரம் பண்டாவெட்டை பகுதியில் கசிப்பு காய்ச்சிய ஒருவரை மதுவரி திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர். அவரிடமிருந்து 4 லீற்றர் அளவான கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளது.



## கிராமம் தத்தெடுத்த மாடு

கண்மண் தெரியாமல் பறக்கும் வாகனங்களினால் மாடுகள் பாதிக்கப்படும் சம்பவங்கள் அண்மையில் நமது பகுதிகளில் அதிகரித்து செல்கிறது. அப்படியொரு சம்பவம் பெல்மதுல்லையிலும் நடந்துள்ளது. விபத்தில் சிக்கிய மாட்டின் முள்ளந்தண்டு பகுதி உடைந்துள்ளது. எனினும், அந்த மாட்டை கிராமமே தத்தெடுத்து, ஆயுர்வேத வைத்தியம் மூலம் குணப்படுத்த முயன்றுவருகிறது.



## நெடுங்கேணி முன்னுதாரணம்

நெடுங்கேணியில் ஐயப்பன் ஆலயம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இதில் விசேட அம்சம் என்னவென்றால் நான்கு மதங்களின் குருமாரும் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டியுள்ளனர். இந்து, கிறிஸ்தவ, பௌத்த, முஸ்லீம் மதகுருமார் அடிக்கல் நாட்டியது முன்னுதாரணமான செயலொன்றுதான்.



## மு.முதலாளி

சவுதி அரேபியாவிற்கு தொழிலிற்கு செல்பவர்கள் படும் அவஸ்தையை இந்த படம் காண்பிக்கும் என நம்பலாம். முதலாளியொருவர் மூன்று இந்திய தொழிலாளர்களை தாக்கும் காட்சி வெளியாகியுள்ளது. முதலாளிகள் விரட்டிவிரட்டி தாக்கும் வீடியோ வெளியானதையடுத்து புதிய சர்ச்சை எழுந்துள்ளது.

## இதுக்கும் குதிப்பார்களா?

எதற்கெடுத்தாலும் இப்பொழுது தற்கொலைதான் தீர்வாகிவிட்டது. இந்தப்பெண்ணை பாருங்கள். அலுவலகத்தில் முதலாளி திட்டிவிட்டார் என யன்னல் வழியாக கீழே குதிக்கிறார். அப்படியொரு வீடியோ வெளியாகியுள்ளது. அவர் குதித்ததும் மற்ற பணியாளர்கள் யன்னலோரம் நின்று கூச்சலிடுகிறார்கள். அதன்பின் என்ன நடந்ததென்பது காட்சியில் பதிவாகவில்லை.





## கள்ளத் தொடர்பு கடத்தல்

தெமட்டகொடவில் இளைஞன் ஒருவரை ஹிருணிகா பிரேமச்சந்திரவின் ஆதரவாளர்கள் கடத்திய விவகாரம் பெரிய சர்ச்சையாக உருவெடுத்துள்ளது. ஆதரவாளர் ஒருவரின் மனைவியுடன் இந்த இளைஞன் கள்ளத் தொடர்பு வைத்திருந்தார் என்று ஹிருணிகா தரப்பு தெரிவித்துள்ளது. கடத்தல் காட்சியின் சிசிரிவி காட்சிகளும் வெளியாகியுள்ளன.



## இப்படியுமொரு தாய்

தனது பிள்ளைகளிற்கு நல்ல பழக்கங்களை கற்றுக்கொடுக்கும் தாய்மாரை பார்த்திருப்பீர்கள். களவெடுக்க கற்றுக்கொடுக்கும் தாயையும் பாருங்கள். இங்கிரிய பகுதியில் நடந்தது. தனது நான்கு வயது மகளுடன் காலணி விற்பனையகத்திற்கு சென்ற தாயார், விற்பனையாளர் வேலையில் இருந்த சமயத்தில் காசுப்பெட்டியை திறந்து களவெடுக்குமாறு பிள்ளையை உற்சாகப்படுத்துவது சிசிரிவி கமராவில் பதிவாகியுள்ளது. தாயின் உற்சாகப்படுத்தலால் 60 ஆயிரம் ருபா பணத்தை குழந்தை திருடியுள்ளது. சிசிரிவி கமராவினால் இது அகப்பட்டுள்ளது.

அனைவருக்கும் புதுவருட வாழ்த்துக்கள்

# Cosy
கொசி Feel like home
HOTEL & RESTAURANT

North Indian | Punjabi | Chinese & Jaffna Foods

HOME DELIVERY FREE (LIMITED AREA)

OPEN DAILY : 11.00am to 11.00pm






HOTLINES 021 222 7100 | 021 222 5899

AC, Non AC Rooms | Restaurant | Party Hall | Roof top Beer Garden | Ample Parking | Generator Backup | Wi - Fi Facilities | 24 Hrs Security Service

*We Accept all Credit Cards*

No. 272, Stanley Road, Jaffna.

Web : www.cosylanka.com | E-mail : info@cosylanka.com | FB/cosy.cosy.167

# MAGNOX கூரைத்தகடுகள்
Roof above all

இலங்கையில் மக்னீசியம் ஒக்சைட் கூரைத்தகடுகளை முதற்தடவையாக அறிமுகப்படுத்துகின்றோம்.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்றது.

பலவர்ணங்களில் கிடைக்கும்

உங்கள் வீட்டிற்கும் , தொழில் கூடத்திற்கும் வெப்பம் குறைந்த, உடலுக்கு தீங்கு விளைவிக்காத இயற்கையான சூழலை உருவாக்கி ஆரோக்கியத்தைத் தரும்.



சிந்தித்து செயற்படுங்கள்
இயற்கைக்கு இடம் கொடுங்கள்

புற்றுநோய்க்கு விடுதலை
அஸ்பஸ்ரோஸ்க்கு விடுதலை
இயற்கையின் கொடை
உலகெங்கும் அங்கீகரிக்கப்பட்டது
பரம்பரைகளுக்கான ஒரு முதலீடு

No Asbestos | No Corrosion | No Fungi
1st Time In Sri Lanka

பாதுகாப்பு, அமிலம், காரம் பூஞ்சணங்களில் இருந்து பாதுகாக்கப்பட்டது, நீர் கசியாத் தன்மை கொண்டது, சூழல் ரீதியான பாதுகாப்பு, உறுதி மற்றும் நீண்ட ஆயுள், காற்று, பெருமழையை எதிர்த்து நிற்கக்கூடியது, நடைமுறை சாத்தியத்தைக் கொண்டது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டத்தின் ஏக விநியோகஸ்தர்

HARI ENGINEERS & CONTRACTORS

Malaisanthi, Alvai Road, Alvai, Jaffna.
Tel : +94 (021) 2261400
Mob : +94 (077) 283 0694

இப்பத்திரிகை நோர்சீ மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால்
172, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள ஈஸ்வா டிஜிற்றல் பிரஸில் அச்சிட்டு 27.12.2015 அன்று வெளியிடப்பட்டது